தமிழ் கூத்தியல்

1. இறைவனும் புலவனும்
2. இராவண சொரூபம்



ஆக்கம்:- அண்ணாவியார் மூ. அருளம்பலம்
(ஆரையூர் அருள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கூத்தியல்

1. இறைவனும் புலவனும் (தென்மோடி 01)

2. இராவண சொரூபம் (தென்மோடி 02)

ஆக்கம்
அண்ணாவியார் மூ. அருளம்பலம்
(ஆரையூர் அருள்)

வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு - தமிழ் கூத்தியல்

வகை - தென்மோடிக்கூத்து

ஆசிரியர் - அண்ணாவியார். மூ.அருளம்பலம்

முதல் பதிப்பு - 2019

பதிப்புரிமை - பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

வெளியீடு - பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

அச்சகம் - சிறீராம் அச்சகம்
(ரிங்கோ பிரிண்டர்ஸ்)
158, தபால் நிலைய வீதி,
திருகோணமலை.
trincoprint.2016@gmail.com
0262228677, 0777262225
F.b:Trinco Printer

பக்கங்கள் - 98

பிரதிகள் - 300

ISBN - 978-955-4628-75-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த எழுத்தாளராகும் பாக்கியம் கிட்டட்டும்...

மாகாணக் கல்விச் செயலாளரின் ஆசிச் செய்தி.

கிழக்கு மாகாணக் கலாசார திணைக்களமானது கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ் சிங்கள முஸ்லிம் உட்பட ஏனைய அனைத்து இனங்களினதும் கலாசார அடையாளங்களைப் பாதுகாத்து மாகாணத்திற்கு தனித்துவமான கலைகள், அதேபோன்று மேற்படி கலைகளில் ஈடுபட்டுவரும் கலைஞர்கள் மற்றும் அவர்களது பல்வேறுபட்ட படைப்புக்களுக்கு ஊக்கமளித்து கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அத்திட்டங்களில் ஒன்று மாகாணத்தில் வாழும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கி வரும் எழுத்தாளர்களை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் எழுத்தாளர் கைநூல் வேலைத்திட்டமாகும். அதன்படி 2019 ஆம் ஆண்டிலும் கலாசார திணைக்களத்தினால் எமது மாகாணத்தின் கலைஞர்களுக்காக இத்திட்டத்தை நடைமுறைப்- படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நூல்களை வடிவமைத்த எழுத்தாளர்களின் சிந்தனை, பல்வேறு அனுபவங்கள் மற்றும் ஆளுமைப்பண்பு அத்துடன் ஆக்கபூர்வமான இரசனைகள், இந்நூல்களில் உள்ளடங்குகின்றது. இதுபோன்ற பல அனுபவங்கள் இலக்கிய பணிகளானது போசாக்கிற்கு மட்டுமல்லாமல் கலாசார மேம்பாட்டுக்கும் மிகவும் உறுதுணையாக அமைகின்றன. அதன் பிரதிபலன்கள் எதிர்காலத்தில் எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கலாம்.

குறிப்பாக இதனுள் எழுத்தாளர்களின் சிறுகதைகள், கவிதைகளின் எண்ணக்கரு மற்றும் விமர்சனங்கள் உள்ளெடுக்கப்பட்டிருப்பதுடன், அது எழுத்தாவணங்களின் சிறப்பம்சம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல்களை பார்க்கும் போது அதில் காணப்படும் திறமை அடிப்படையிலான படைப்புக்கள் மொழியால் அலங்கரிக்கப்பட்ட, பட்டை தீட்டப்பட்ட நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிலான பெறுபேறுகளை சுட்டிக்காட்டுகின்றது. அது எழுத்தாளரின் கைவண்ணமாகும். எவ்வாறிருந்த போதிலும் இறுதியாக இந்த நூல்களை வரைந்த எழுத்தாளர்களின் எதிர்கால வாழ்வுக்கு நல்வாழ்த்துத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் காலங்களிலும் இதுபோன்ற நற்பணிகளை மென்மேலும் வளர்த்துக் கொண்டு ஒரு சிறந்த எழுத்தாளராகும் பாக்கியம் கிட்டவேண்டுமெனவும் பிரார்த்தனை செய்கின்றேன்.

ஐ.கே.ஜி.முத்துபண்டா,
செயலாளர்,
கல்வி அமைச்சு,
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்மேலும் இத்துறையிற் பிரகாசியுங்கள்...

கிழக்கு மாகாணப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வேலைத்திட்டங்களில் கிழக்கு மாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் ஒரு பெறுமதிவாய்ந்த பணியாகும். ஏனெனில் நூல் வெளியீடுகள் பொருளாதாரச் சுமை மிக்கதால் குறைந்த அளவிலேயே இடம்பெறுகின்றன. பல பிரதிகள் நூலுருப் பெறாமல் உறங்குநிலைக்குச் செல்கின்றன. இவற்றை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக நூலுருவாக்கம், சிறந்த நூல் தெரிவு, நூல் கொள்வனவு என்பன கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதியான நூல்களைப் பிரசுரிக்கின்ற 2019ஆம் ஆண்டிற்கான நூலுருவாக்கப் பணித்திட்டத்தினூடாக தங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு எழுத்தாளன் கற்றல், கற்பனைத்திறன், எண்ணம், அனுபவம், படைப்பாற்றல், ஆளுமை என்பவற்றைப் பயன்படுத்தி சீரான ஒழுங்கு முறைகளினூடாக ஒரு ஆக்கத்தைப் பிரசவிக்கின்றான். இவ்வாறான பிரசவங்களினூடாக பல்வேறு ஆக்க இலக்கியங்கள் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. இவை சமூகத்தின் பரிணாம வளர்ச்சிக்குரிய பண்பாடுகள் மற்றும் விழுமியங்களை எடுத்தியம்பி அடுத்த தலைமுறைக்கு அவற்றை எடுத்துச் செல்கின்றன.

2019 ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலம் நூலுருவாக்க- த்திற்குக் கிடைக்கப்பெற்ற இருபத்தி மூன்று (23) வகையான பல்வேறு ஆக்கங்களிலிருந்து எமது நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ஒன்பது (9) ஆக்கங்கள் பிரசுரத்திற்கு உகந்தவையாகத் தகுதியான நடுவர் குழாமினால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இங்கு இளம் எழுத்தாளர்களின் கன்னி வெளியீடும், மூத்த எழுத்தாளர்களின் விரிந்த எண்ண அனுபவ ஆக்கங்களும், அறிவியலும், தொழில்நுட்பமும், நாட்டார் இலக்கியம், சுயகவிதை, சிறுகதை, சிறுவர் இலக்கியம், புலமைத்துவம் சார் படைப்புக்கள் என பல்வேறு வடிவில் ஆக்க இலக்கியமாக நூலுருப்பெறுவது சிறப்பான ஒரு அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழ் கூத்தியல்" எனும் இந்நூலின் நூலாசிரியர் தனது விரிந்த சிந்தனை, பரந்த அனுபவம் என்பனவற்றுடன் கூடிய மொழிவாண்மை மூலம் இதனை படைத்துள்ளார். இந்த படைப்பும் வாசகர் நுகர்விற்கு மிகவும் பொருத்தமானது என நம்புகின்றேன். அந்தவகையில் இப்படைப்பினை மேற்கொண்ட நூலாசிரியரை பாராட்டுவதுடன் அவர் மேலும் இத்துறையில் பிரகாசிக்க வாழ்த்துக்களைச் தெரிவிப்பதோடு இத்தேர்விற்கு உதவிய நடுவர்கள் குழாத்திற்கும் சிறீராம் அச்சகத்திற்கும் இச்சந்தர்ப்பதில் நன்றியை நவில்கின்றேன்.

திரு. சரவணமுத்து நவநீதன்
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை

இறைவனுடைய சிருஷ்டியில் எண்ணிலடங்கா விடயங்கள் உண்டு. இதில் முக்கியமானது நாட்டியக்கலை அதில் ஆடலுடன் பாடலும் இசையும் சேரும் போது எமையெல்லாம் ஏதோ பரவசத்தில் ஆழ்த்தி வைக்கின்றது. இந்த பரவசத்தை எமக்கு தருபவர்கள், கலைஞர்கள் கலைகளில் அனாதியானது கூத்து. தில்லையம்பலத்தில் சவுனகாதி முனிவர்கட்கு பரமசிவன் தாண்டவமாடி கூத்தாடி என பெயர் பெற்ற பின் அக்கலையின் பரிணாமம் கூத்து என பலவிதமான அசைவுகளுடன் நிலைபெற்றது. இதில் ஆடல், பாடல் தரு, தாளம் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்தனை விடயங்களையும் ஒருங்கே அமைத்து தரவல்லவர்கள் இப்போது அரிதாகவே உள்ளனர். அதிலும் முக்கியமாக பாடல் எழுதுதல், ஆடுதல், மத்தளம் அடித்தல், சல்லரி மீட்டுதல், கொப்பி பார்த்தல், பழக்குதல் என்பன தனித்தனி விடயமாக நாட்டுக்கூத்தில் மிளிருகின்றன. இவ்விடயங்களையெல்லாம் தனியொரு மனிதனுக்குள் ஏற்படுத்திக் கொள்வதென்பது இறையருள். இது ஆரையூர் அருளுக்கு இறையருள்.

இவ்விதமான பெருமைதனை தன்னகத்து அடக்கி அமைதியாக அடக்கமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆரையூர் அருள் எனும் அருளம்பலம் ஐயா அவர்களினால் எழுதப்பட்ட நூல்களில் நமக்கெல்லாம் மிக அறிவு புகட்டுகின்ற இராவணசொருபம் எனும் தென்மோடி நாட்டுக்கூத்து இராமாயணத்திலுள்ள அற்புதமான வடிவம் மனிதனை உடன்பிறந்து கொல்லும் வியாதி பொறாமை. இது இராவணனிடம் உண்டாகி எவ்வளவு பேரழிவை கொண்டு வந்தது என்பதனையும் சம்பந்தமில்லா விடயங்கட்குட்பட்டு அலக்கழிவதையும் இக்கூத்தின் வழியாக கூறி இராவண சொருபம் என்றால் இராவணன் பற்றிய உண்மை திரை என்ன என்பதை தெளிவு படுத்த முற்பட்டிருக்கும் திறமை ஆசிரியர் அவர்களின் அறிவாற்றலை வெளிப்படுத்துகின்றது.

தற்போது இவரால் எழுதப்பட்ட "தமிழ் கூத்தியல்" எனும் நூலில் இராவண சொருபம், இறைவனும் புலவனும் என்னும் இரு தென்மோடி கூத்துப் பாடல்கள் அழகு தமிழில், அருமையான சொற்றொடரில், எதுகை, மோனை ததும்ப இனிய கானம் மீட்டி நிற்கின்றன. சங்க காலத்தில் இருந்த சொல்லிறுக்கம் இன்று தளர்த்தப்பட்டாலும் இவரின் வரிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றது. இவை போன்ற இன்னோரன்ன பாடல்களை நம்மொழியில் புதைந்து போயிருக்கின்ற மற்றும் கலைவடிவங்களை ஆக்கித்தர இறைவன் நமக்களித்த பொக்கிசம் அருளம்பலம் ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் தமிழ் பணி தொடரவும், புதிய வெளியீடுகள் மலரவும் ஆயுள் விருத்தியுடன் ஆரோக்கியம் பெருகவும் தேடுதல்களில் சளைக்காதிருக்கவும் எல்லாம் வல்ல நாகலிங்கேஸ்வரர் அருட்கடாச்சம் பெற்று அவனிபுகழ வாழ என்னுடைய மனமார்ந்த ஆசியினை வழங்குகின்றேன்.

அழகு தமிழ்ப் புலவா நீ அற்புதமான கலைவடிவம்
ஆற்றுவாய் எமது மொழியழகுதனை உலகறிய
இன்றுமை புகழ்வது எம்மினத்தின் பெருமை
ஈடிணையில்லாத இலக்கிய வாதியென்று
உறுதியுள்ள மனமுடனே ஊன்றிடுவாய் உணர்வினையே
ஊறிவிட்டோம் உம்முடைய பழந்தமிழர் பண்பாட்டில்
என்றென்றும் நீ அற்புதமாய் இயம்பிடுவாய் பல கவிதை
கபரன் அருளோடு என்றுமே துணை நிற்பார்
ஐயம் திரிபுபற அமுத சுரபிபோலே
ஆக்கமதை அழித்திடுவாய் அன்போடு வாழ்த்துகிறேன்
ஒருமையுடன், பன்மை ஒற்றுமை, வேற்றுமை, எதுகைமோனை
ஓரடி, ஈரடி கலிப்பா, கவிப்பா, துதிப்பா, வஞ்சிப்பாவென

"வளர்க நுன் பணி"

சிவஸ்ரீ பரசுராமன் மானாகப்போடி ஐயர்
நாகலிங்கேஸ்வர ஆலய பிரதமகுரு
முனைக்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயவுரை

"தேன்மதுர தமிழோசை பரவச்செய்"

இசைவை அசைத்து கூத்தியலை இறைக்கும்
அசை இயவாகி தென்மோடிக் கூத்து - தசைவை
இசைக்குரிய முறை விலகாதிரண்டு
தகைசேர் கூத்தீந்தார் ஆரையூர்அருள்

நீர்வளம் நிலவளம் நிறை
சீர்உடை பல்கலை களுறை
பார்மதி பாவலர்கள் திகழ்
கிங்கினி சலங்கையொலி கூத்தாடூரின் கண்
மந்திர சடங்கு மிகுகோயில்கள் மணியொலிக்கும்
செந்தமிழ் திருப்பதியாம் ஆரையம்பதியின்
மைந்தனாம் ஆரையூர் அருளம்பலவனார்தம்
சிந்தையில் உதித்த செம்மை மூவாயிரமும்
தெள்ளு தமிழ் தாய்க்கு நவரத்தின மாலைகளே என
கொள்ளையின்பக் கொண்டையான் - இன்றவர் தம்
குத்தி மிதித்து துள்ளிமிதித் தாடுதென்மோடி
கூத்தினை ஆடிட யாத்துள்ள இரண்டுகாதை
அட்டதிசையும் பெரும்புகழினை சொல்வன கண்டு
எட்டினரோடு மகிழ்ந்து ஆட எண்ணினேன்- வயதாயிற்றே.

ஒவ்வொரு பிரதேச மக்களும் எப்படி எப்படி முன்னோர்கள் தென் வடமோடி கூத்துக்களை பாடி ஆடினார்களோ அம்முறையிலேயே தொடர்ந்தும் ஊக்குவித்தல் வேண்டும் என்ற இதயம் கொண்டவர் கவிஞர் ஆரையூர் அருள் என்றால் மிகையில்லை. கூத்துக்கள் கிராமிய மக்களுடனும் கிராமிய வாழ்வியலுடனும் இணைந்தவை. அவை உயிர் துடிப்போடு வாழும் வகை செய்யும் வேர்கள் கிராமிய கலை வாழ்விலேதான் உள்ளன.

எனவே கிராமியக் கலைகள் மனித உள உடல்களை ஆரோகணிக்க செய்து உச்ச மனோலயத்தை கொடுப்பதில் தென்மோடிக் கூத்து முதன்மையானது எனலாம். யோககலையின் மூச்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்வளையல், தலைஅசைவுகள் போன்று இக்கூத்தில் இன்றியமையாத பிராணசக்தியை ஏற்படுத்தக் கூடியவை. "கூத்து வளர்ந்தால் ஆத்துக்காரன் வளருவான்" என்ற பழமொழியை இன்று நாம் அறியோமில்லை. கூத்துக்கள், வசந்தன்கள் யாவுமே மனித மனத்தின் மனோ நிலையை உயிர்ப்பிக்கின்றன. குறைபாடுகள் இருந்தாலும் நளின, பாவ, சுருதி, லய, நெஞ்சார்ந்த கெஞ்சலால் ஆரோக்கிய வாழ்வினை கூத்தியல்கள் அளித்தன.

கிராமிய ஆடலில்தான் கூத்தம்ச பாவம் இழையோடி இன்பமளிக்கும் என்பது ஆரையூர் அருளின் சீரகச்சிந்தனை. ஆசிரியராக, அதிபராக இருந்தமையால் தானோ இவர் மாணவர்களுக்கான நாடகம், இசைக்கூத்து, வில்லியல் இசை எழுதுவதில் இன்பம் காண்கிறார். இன்று எமது கைகளில் எழுதப்பட்டுள்ள இரண்டு கூத்துக்களிலும் இழையோடும் ஆடல் இலகு தருக்களாக பாடலமைவு, மாணவ சமுதாயத்திற்கு இயைபாய் அமைந்த கூத்து எனவாம். சொற்களை யாவரும் விளங்கும் இலகு சொற்களால் அமைக்கப்பட்டமை பாராட்டுக்குரியது.

இறைவனும் புலவனும் என்ற முதல் பாட்டில் வரும் "நக்கீரன் நற்றமிழ் பற்றுறுதி" என்ற பாவின் பதங்கள் கதையின் உயிர்ப்பை விளக்கும் பதம் கொஞ்சு சதங்கை ஒலிப்பதங்களாக பிரகாசிக்கின்றது. கட்டியக்காரனின் சபைவிருத்தப் பாடல் கூத்தின் நடை, பைரவியாக திகழ்கிறது. பாண்டியன் பூங்குழலி வரவு, விருத்தமான "மெட்டுத்திக்கு மென" தொடங்கு பாடலிலும் சபைப்பாடலிலும் நெட்டோசை சிருங்காரமும் மெட்டார்ப்பு புரிதமும் புக்கித்தோன்றி சீர்காய்ப் பண்முறைமை சொற்திறன் கொண்டு சார்புடையதாக மிளிர்கிறது. இது கவிஞனின் கவிச்சிறப்புக்கு எடுத்துக்காட்டு எனலாம். பாண்டியன் பூங்குழலிக்கான இணை இயல் காதை கவிதைகளில் வியப்பு நவினம், ஆதங்கம், உளவார்ப்பு சாராதர்க்கம் போன்ற நடிப்பியல் தன்மைகளை வெளிப்படுத்தக் கூடிய நல்நய தமிழ் சொற்கள் நாட்டமிடுகின்றது.

வாசப்பிரச்சனைக்கு வசமான வசந்த தரு அமைவு அமைத்தது ஆரையூர் அருளின் கூத்தாடிய அனுபவ முதிர்வு என்று எண்ணத் தோன்றுகிறது. சாம்பான் தரு, சாம்பான் கவிப்பாடல்களும், தருமி வரவு, தருமி இன்னிசை ஆரோகணிக்கும் திறனியல் பொருளை களரியின் ஆடல் வேளை பதனிலை பாங்கு முகநிலை பாவம் மூலம் விளக்கினால் இந்த இரு கூத்தின் மேம்பாடு சொல்லில் அடங்காது துலங்கும். இறைவன் வருகையில் இருந்து தருமியோடு நிறைவாக அறைகூவியாடத் தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெம்பீரத் தருவும், எ்.து தருவும் முறைப்படி பாடல் வரிகளில் அமைந்துள்ளது. பாடல்களின் சொற்களை கேட்க அவை அந்த மாத்திரத்திலேயே கூத்துப் பாடல்களின் சொல்லால் தருப்படை விகிர்தத்தால் இன்னும் அறிய முன்னே இழுக்கும் தன்மை கொண்டதாய் உள்ளது. போரார் கூத்தை பேரார்வத்தை கொண்டுவரும் தன்மையாக பாடல் நடைகள் சிறப்பம்சமாக மிளிர்கிறது.

இறைவனும் புலவனும் நிறைநாளியாக களரி காண தொடர்ந்துவரும் எ்.கு துள்ளல் நடை குக்குட தாண்டவ நடை மயிலின் தேடல் நடை கொண்ட இராவண சொரூபம் என்னும் தென்மோடிக் கூத்தின் சீர்மை சிந்துச் செய்யுள் கொண்ட இன்னுமோர் கூத்து.

இதன் கண் மண்டோதரி வரவு குறித்து வரும் இரண்டு பாடல்களிலும் கவிஞரின் உளமான முகிழ்ப்பும் சொற்சிலம்பகமும் துள்ளியமாக தெரிகிறது. இந்திரசித்து மண்டோதரி தரு, இராவணன் மண்டோதரி கொச்சைத்தரு, இராவண போர்வீர சங்கம சம்பவபாக்களும் துள்ளு நடையால் அரியுறுமச்சிந்து நடையால் அகமகிழ்வை ஆரோகணிக்கிறது.

"பிறையாளன் பெருமைதனை
நிறைவான கூத்தமர்தாய் ஈந்த கலைத்
துறைசார்ந்த ஆரைஅருள் இன்னும்
பிறைகண்டு பைந்தமிழை படிக்கத்தா"

கூத்துக்கள் இடையே ஓடும் பாவாக ஓடி நெய்வுறு ஆரையூர் அருளின் இரண்டு கூத்துக்களிலும் இரண்டு எதிர்மறைகளுக்கு இடையில் நடக்கும் மோதல்களையே கூறுகின்றன. இறை, தருமி, நக்கீரர், மண்டோதரி, இந்திரசித்து, போர்வீரன், இராவணன் எதிர்நிலைத் தன்மை காட்டும் கூத்துக்கள் மூலம் பார்ப்பவர்கள் மனதில் நீதி, அநீதி, சாவு, வாழ்வு, இன்பம், துன்பம் உணர்வுகளை தெளிவாக்கும் அன்புடையவர்களுக்கு ஏற்படும் துன்பங்களும் அது கடவுள் அருளால் தீரும் விதமுமே கூத்துக்களின் கருப்பொருளாக அமைந்துள்ளது.

இன்பமே என்நாளும் துன்பமில்லை என இரு கூத்தும் என் உள்ளத்தில் கூத்தாடுகிறது. அதே போல் இவற்றின் முறைபற்றி நன்றாகப் பயின்றாடி தில்லைக்கூத்தன் அருள் யாவரும் பெறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமலர் வாசமும் பாவையர் நேசமும்
நாமகளின் வாசக் கூந்தல் காவி நவிள்
"கா" மலரும் களபூமிக் கவிஞனே
தேன் மதுர தமிழோசை பரவச்செய்.

கலாபூசணம், முத்தமிழரசு, சரஸ்வதி கடாட்சகர்
சாம்பசிவம் சிவாச்சாரியார்
காயத்திரி பீட குருமுதல்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புரை

ஆரையம்பதி அன்னையின் மைந்தர்களில் ஒருவரான திரு. மூ. அருளம்பலம் அவர்கள் இம்மாவட்டத்தின் ஏராளமான தலங்கள் மீது பக்திப் பாடல்களைப்பாடி இவைகளைப் பல நூல்களாக வெளியிட்டதோடு இருபத்தாறு ஒலிப்பேழை, இருவெட்டுக்களையும் பக்தி மணம் கமழ வெளியீடு செய்த முதல் பெருமைக்குரியவர். "இறையின்பப்பாவாரம்" எனும் பெருநூலை வெளியிட்டு கிழக்கு மாகாண இலக்கிய விருதினையும் பெற்றவர். இவற்றுடன் உ. வே. சாமிநாத ஐயரைப் போல ஒவ்வோர் ஊர்களுக்கும் சென்று அங்குள்ள கிராமத்து இலக்கியங்களைத் தேடி எடுத்து தென்றல் போன்ற பத்திரிகைகளிலும் வெளியிட்டு "கிராமத்து உள்ளங்கள்" என நூலுருவாக வெளியிட்டு தேடலுக்கான திறமை விருதினையும் பெற்றவர். இத்துடன் கூத்துக்கலைகளிலும் ஈடுபட்டுக் கொண்டு வருபவர் என்பதனை நான் சொல்ல வேண்டியதில்லை. அவர் பெற்ற விருதுகளும், ஊரும் சான்று பகரும்.

பொதுவாகக் கூத்துக் கலைகளில் ஈடுபடுபவர்கள் மட்டக்களப்பில் பெரும்பாலும் வடமோடிக் கூத்துக்களையே தெரிவு செய்வார்கள். இவர் வடமோடியில் மட்டுமல்ல தென் மோடியிலும் திறமை வாய்ந்தவர் என்பதனை "தமிழ் கூத்தியல்" என்னும் இந்நூல் எடுத்துக் காட்டுகின்றது. "இறைவனும் புலவனும்", "இராவண சொரூபம்" என்ற இரு தென்மோடிக் கூத்துக்களும் இவருடைய திறமையையும் அனுபவத்தினையும் கற்பனையையும் எடுத்துக்காட்டி நிற்கின்றன. பரம்பரை அமைப்பை (மரபுமுறையை) மாற்றாமல் உள்ளடப்பத்தில் சிறு மாற்றங்களை (புதுமைத்துவத்தை) ஏற்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக, அரச சபையிலுள்ள மந்திரியைப் பார்த்து தமது ஆட்சியில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி கேட்கும் வழக்கத்தை மாற்றி தனது மனைவி பூங்குழலி நாட்டு வளப்பம் கேட்பதாக அமைத்துள்ளார்.

வாசகர்கள், பார்வையாளர்கள், பழக்குபவர்கள் விளங்கிக் கொள்ளக் கூடியதாக தென் மோடிக்குரிய சிறம்பம்சமான பாடல்களுடன் அதன் இசைத்திறவு கோல்களான தருக்களையும் தந்து இலகு படுத்தியுள்ளார். தென்மோடிக் கூத்துப் பாடல்களிலுள்ள எல்லா இசை வடிவங்களிலும் இனிமையான சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய பாடல்களை யாத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமோடிக் கூத்துகளிலுமுள்ள பாடல்களிலே தாளத்துக்குக் கட்டுப்படாத இயற்றமிழும், கட்டுப்பட்ட இசைத்தமிழும் சேர்ந்து வரும் இசை வடிவங்கள் மிகச்சிறப்பானவை. இதை வடமோடியில் "கந்தார்த்தம்" என்றும் தென்மோடிப் பாடல்களில் சிறப்பாக இடம்பெறும் "கொச்சகம்" எனும் தருப்பாடல்களும் இவர் ஆக்கத்தில் விரவிக் காணப்படுவது கூத்திற்கு அணி சேர்க்கின்றது. அன்றியும் அனுருத்திரன் தென்மோடிக் கூத்தில் வருவது போன்று கொச்சகமும் வசனமும் சேர்க்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இராவண சொரூபத்தில் மகன் இறந்ததைக் கேள்வியுற்ற இராவணன் புலம்பும் தருப்பாடல்கள் மிகவும் கர்ச்சிதமாக அமைக்கப்பட்டு படிப்போர், கேட்போர் உள்ளத்தை உருகவைக்கும் சொல்லாடலும் உணர்ச்சி ததும்பும் வகையில் ஆக்கப்பட்டுள்ளது இவரின் ஆற்றலுக்குச் சான்று பகர்கின்றது. பல்வேறு பட்ட தென்மோடிக் கூத்துக்களிலுமுள்ள பாடல் அமைப்புக்களிலும் மிகுந்த பரீட்சயமுள்ளவரென்பதனை இவ்விரு கூத்துப்பிரதிகளும் கோடிட்டுக் காட்டுகின்றன.

கதை ஓட்டத்தை கவிதை ஓட்டங்கள் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. இவரது ஆற்றல், அறிவு, திறமை, கற்பனை மெச்சத்தக்க உச்ச நிலையில் உள்ளதனை பாராட்டாமல் இருக்க முடியாது. இதற்காக எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இப் பல்துறைக் கலைஞன் மென்மேலும் பல ஆக்கங்களை ஆக்கியளிக்க எல்லாம் வல்ல இறைவன் ஆரோக்கியத்தையும், வல்லமையும் அளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். மென்மேலும் வளர்க இவர் கலைத்தொண்டு என வாழ்த்துகின்றேன்.

மு. கணபதிப்பிள்ளை (மூனாக்கானா)
ஆரையம்பதி
22.04.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தலைமுறைகளுக்கு பகிரக்கூடிய பாரம்பரியப் புலமை இவரிடம் உள்ளது.

ஆரையூர் அருளம்பலம் அவர்களது இரு தென்மோடிக்கூத்து நூல்களுக்கான அறிமுகக் குறிப்பு

பாரம்பரியக் கலைகள் அழிய நேர்ந்தால் சமகாலக் கலைகளுக்கான ஒரு முக்கியமான விளை நிலம் அழிகின்றதென்றே பொருள். இலக்கியத்திற்கும், நேராக வாழ்வில் இருந்து அனுபவங்களை எடுக்கும் பாரம்பரியக் கலைகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளது. தன்னிச்சையாக கட்டற்ற வெளிப்பாட்டை, அதற்கான சூழலை உருவாக்கும் சக்தி பாரம்பரியக் கலைகளுக்குண்டு. இதனால் கலைகளுக்கான சூழல் மாறினாலும் கலைகள் வாழக்கூடிய புதிய சூழலுக்கான புதிய களங்களை உருவாக்கி இப்பாரம்பரியக் கலைகளை நிலைத்து நிற்றலுக்கான அமைப்பாக செயற்படுத்தும் திறன் பாரம்பரியக் கலைஞர்களுக்குண்டு. நாட்டார் இலக்கியங்களில் செறிவையும் அதில் அர்த்த அடுக்குகளையும் எதிர்பார்க்கக் கூடாது என சிலர் கூறுவர். ஆனால் இவற்றோடு சரளமாக, உடனடிவெளிப்பாடாக படைப்புக்களை உருவாக்கக்கூடிய ஆற்றலுடன் பல பாரம்பரிய கலை விற்பன்னர்கள் நம்மத்தியில் திகழ்கின்றனர். அதன் ஒரு குறியீடாக ஒரு அத்தாட்சியாக எம்முன் ஆரையூர் அருள் அவர்கள் திகழ்கிறார்.

பிறர் அணுகத் துணியாத இலக்கியத் தடங்களில் எல்லாம் நம்பிக்கையுடன் ஈடுபடும் ஓர்மம் இவருக்கிருக்கின்றதென்பதில் எந்த ஐயப்பாடுமில்லை. ஈழத்திலே நாட்டுக் கூத்துக்களைப் பொறுத்தவரையில் அவை அவ்வப்போது, மேடையேற்றப்பட்டு வந்ததைத் தவிர அவை இலக்கியமாக, பனுவலாக எழுதப்படும் முயற்சிகள் அருந்தலாகவே நடந்தேறின. காலவோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் நவீன நாகரிகமும் கிராம வாழ்க்கையின் சிதைவும் இக்கூத்து மரபுகளையும் அதன் முக்கிய அம்சமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகளையும் கேள்விக்குள்ளாக்கின. இன்றைய சூழலில் அது வாழ முடிந்தால் வாழட்டும் என்று அப்படியே விட்டுவிடாமல், அதன் இலக்கியச் சாத்தியப்பாடு குறித்த எண்ணத்தோடு புதிய பனுவல்களை உருவாக்குதல் என்பது அதன் இலக்கியப்பரப்பை ஆழப்படுத்துவதோடு பார்ப்போர் மனத்தில் கூத்து இலக்கியம் சார்ந்த பல்வேறு கனவுகளையும் புதிய தரிசனங்களையும் செயற்பாட்டு உந்துதல்களையும் கிளர்ந்தெழச் செய்வதற்கான ஒரு சூழலைச் சிருஸ்டித்து விடும். இதற்கு பொருத்தமான கூத்துப்புலவனை காலம் வேண்டி நிற்கிறது. அவ்வாறு நமக்குக்கிடைத்திருக்கும் கூத்தாசிரியனே ஆரையூர் அருளம்பலம் அவர்களாவார்.

கூத்துப்புலவர் என்பார், அடிப்படையில் ஒரு இசையாசிரியனே. பண்டைய கூத்துகளில் பாடகன் ஒருவன் இசைப்பதற்கென்றே இருந்திருக்கிறான் என்பதை சிலப்பதிகாரத்தின் "அரங்கேற்று காதை"யிலிருந்து நம்மால் அறிய முடிகிறது. அவன் வரிப்பாட்டிற்கும், ஆடலுக்கும் உரிய பொருளை விளக்கி, இயற்சொல், திரிசொல், திசைசொல், வடசொல், ஆகிய சொற்களின் ஓசைகளைச் சுத்தமாகக் கடைப்பிடித்து, அந்த ஓசையின் இலக்கணங்களையெல்லாம் குற்றமறத்தெரிந்த அறிவாளியாயிருக்க வேண்டும் என்பது மரபு. இந்த மரபே கூத்து மரபின் தொடர்ச்சியாயிற்று.

கூத்தின் வெளிப்பாட்டிலே பாடல்களுக்கு முக்கிய வகிபாகம் உண்டு. மெய்ப் பாடுகளுக்கும் உணர்ச்சிக் கிளர்வுகளுக்கும் உகந்த நடைவேறுபாடுகளையும் தாள லயத்தையும் கொண்ட புதுப்புது யாப்புக்களிற் பாட்டுக்களை இயற்ற வேண்டியது கூத்துப் புலவர்களின் பிரதான கடனாயிற்று. கூத்துப் பாடல்களுக்கு ஓசைநயம் உயிர் நாடியாய் அமைந்திருந்ததால் பொருத்தமான யாப்பமைதிகளை கூத்துப் புலவர்கள் நாட வேண்டியிருந்தது. இசையறியாமல் எழுதுவதால் கூத்துப் பிரதியின் தன்மையை இழக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிவரும். எனவே கூத்துப் பற்றிய ஆழமான அறிவும் இயல், இசை, நாடகத் தமிழில் பாண்டித்தியமும் உள்ள ஒருவராலேயே கூத்துப் பனுவலைச் சரியாகப் படைக்க முடியும். இவை ஆரையூர் அருளம்பலம் அவர்களுக்கு மிகத் தாடனமான விடயங்கள். இதற்கு இவரது இராவண சொரூபம், இறைவனும் புலவனும் எனும் இரண்டு தென்மோடிக் கூத்துப்பிரதிகளுமே அத்தாட்சிகள். இராமனின் அம்பறாத்துணி எடுக்க எடுக்கக் குறையாத பாணங்களைக் கொண்டதாம். இராமனின் அம்பறாத்துணி போலவே ஆரையூர் அருளம்பலம் அவர்களின் சொல்வளமும் எடுக்க எடுக்க குறையாதது என அடையாளங்காட்டி நிற்கின்றன இந்தப்பிரதிகள்.

ஒரு செய்யுள் படைப்பிற்கு இன்றியமையாத இருபத்தாறு உறுப்புகளுள் ஒன்றாக தொல்காப்பியத்தில் மெய்ப்பாடு குறிப்பிடப்படுகிறது. தொல்காப்பியரின் கருத்தின் படி மெய் என்பது படைப்பு (செய்யுள்) என்றும், படைப்பினால் சுவைகளைப் புலப்படுத்துவது மெய்ப்பாடு என்றும் கூறப்படுகிறது.

"உய்ப்போன் செய்தது காண்போர்க்(கு) எய்துதல்
மெய்ப்பா(டு) என்ப மெய்யுணர்ந்தோரே"

என்னும் நாடக இலக்கண நூலான செயிற்றியம், உய்ப்போன் (படைப்போன்), காண்போருக்காக (வாசிப்போர்) செய்வது படைப்பு எனக்குறிப்பிடுகிறது. மெய்ப்பாடு வாசிப்பவனிடம் ஏற்படுத்தும் மாற்றம் சுவை எனப்படுகிறது. சுவை என்பதற்கு இளம்பூரணர் "சுவை என்பது காணப்படு பொருளால் காண்போர் அகத்தில் வருவதோர் விகாரம்" என்கிறார்.

சலனமற்ற மனத்தோடு ஒரு படைப்பை படிக்கத் தொடங்கும் நம்மைத் தன்னுள் இழுக்கும் படியான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பு ஏற்படுத்தும் பரபரப்பு, பரவசம், சோகம், சந்தோசம் என்ற உணர்வுகளால் நம்மை ஆட்கொள்ளுதல் மெய்ப்பாடு ஆகின்றது. பொதுவாகக் கூத்தில் இத்தகு மெய்ப்பாடுகள் பயின்றுவரவேண்டியது அவசியமாகின்றது. ஆக படைப்போனின் உணர்வுகளைப் படிப்போனின் மனதில் இடம் மாற்றச் செய்யும் கலையை இலக்கணமாகத் தரும் மெய்ப் பாட்டியலை கூத்தின் யாப்பமைதி முறைகள் சரியாகப பேணியிருக்கின்றன. அவை அளவறிந்து பயன்படுத்தும் போது தான் அந்த கூத்திலக்கியத்தின் அனுபவத்திற்குள் எம்மால் செல்ல முடியும்.

தென்மோடிக் கூத்தின் அமைப்பும், அதிற் கையாளப்படும் பாடல் முறைகளும், அதன் உட் பொதியும் செழுமையும் ஒரு தொல்சீர் நெறியின் எச்சங்கள் என்பது நிருபணமாகின்றன. பாட்டின் பொருளுக்கும் வடிவிற்கும் இயைபு உண்டு. உணர்த்தப்படும் பொருளும் அதை உணர்த்தும் வடிவமும் பிரிக்க முடியாதன. தமிழிலக்கிய வடிவமைப்பில் யாப்பமைதிக்கு முக்கிய இடமுண்டு. மரபு வழிக் கூத்துக்களைப் பொறுத்தளவில் ஆடலையும் பாடலையும் ஒருங்கிணைத்து மெய்ப்பாட்டுச் சுவைகளை மிகுவித்தற்குப் பொருத்தமான பல்வேறு யாப்பு வகைகளை கூத்தாசிரியர்கள் கையாண்டுள்ளனர். அவற்றின் தன்மைகளை புலவரும் பயன்படுத்தியிருப்பது பிரதிகளினடியாகப் புலனாகின்றது.

ஆசிரியப்பாவின் இனங்களுள் ஆசிரிய விருத்தமும் கலிப்பாவின் இனமாகிய கலிவிருத்தமும் மிகப்பரவலாகக் காப்பியங்களில் இடம் பெற்றவை. கம்பராமாயணம், பெரிய புராணம், சீவகசிந்தாமணி போன்ற பெருங் காப்பியங்களில் இவை ஆளப் பெற்றிருப்பதைக் காணலாம். எவ்வகைக் கருத்தையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்தவும், நீண்ட கதை நிகழ்ச்சிகளை இனிய ஓசை அமைப்புடன் விளக்கிக் கூறவும் ஆசிரிய விருத்தம் தென்மோடியில் பொருத்தமான யாப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பட்டிருக்கின்றது. இவரது இரு பிரதிகளிலும் பல இடங்களில் இதனைக் கையாண்டிருப்பதைக்காணலாம். ஏனைய இனங்களைப் போலன்றி ஆசிரிய விருத்தம் சந்த ஒழுங்குக்கு உட்பட்டு வரும். சந்த ஒழுங்கு என்பது முதலடியில் வரும் சீர் அமைப்பு அதே மாதிரியாக ஏனைய மூன்றடிகளிலும் வருதல் வேண்டும். இவ்வமைப்பின் காரணமாக ஆசிரிய விருத்தம் இனிய ஓசை அமைப்பைப் பெறுகிறது. இராவண சொரூபத்தில்,

"ஈழமாம் இலங்காபுரிதன்னை இட்டமோடரச தாண்ட
சூரனாம் இராவண சொரூபமதை துலங்கு நாடகமாப்பாட
பாரதம் தன்னை வெண்கொம்பொடித் தெழுதியளித்த
வாரணமுகவைங்கர வேழமுகவன் திருவடி காப்பதாமே"

என அதன் தன்மையுணர்ந்து பொருத்தமாகப் பயன்படுத்தி இருப்பதைக் காண முடிகின்றது. மட்டக்களப்பு தென்மோடி நாடகங்களிலே கொச்சகம் அதிகமாகப் பாவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான கொச்சகங்கள் காய்முன் நிரைவரும் அளவடியாலேயே ஆக்கப்பட்டுள்ளன. அறுசீர் பெற்று வருவன மிகக்குறைவே. விருத்தம் பெறும் இடத்தினைச் சில வேளைகளில் கொச்சகம் பெறுவதனைக் காணலாம். இராவணண் சொரூபத்தில் வரும் இராவணன் கொச்சகமும் மண்டோதரி கொச்சகமும் இறைவனும் புலவனும் பிரதியில் இறைவன் கொச்சகமும் தருமி கொச்சகமும் நக்கீரர் கொச்சகமும் சிறப்பாக அமைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இறைவனும் புலவனும் எனும் பிரதியில் இறைவன் கொச்சகம்

"தலைமைப் புலவனென்ற செருக்கோ மிடுக்கோ தலைக்கனமோ
புலமை முழுவதுமறிந்த இறைவனென்று அறியானோ...."

என சந்த ஓசையுடன் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மோடிக் கூத்துக்களில் பல இடங்களில் தருக்கள் பயன்படுத்தப்படுகின்றன. தரு, மறு தரு, பல்லவித் தரு, தோற்றத்தரு, விளையாட்டுத் தரு, வரவுத் தரு, தர்க்கத் தரு, வண்ணத் தரு, சண்டைத் தரு, சபைத் தரு, ஏணித் தரு, தாலாட்டுத் தரு, தாழிசைத் தரு, கொச்சகத் தரு, ஊஞ்சற் தரு, வழி நடைத் தரு, கலிப்பாத் தரு, தேவாரத் தரு, வாழித் தரு என பல்வேறாக அமைகின்றது. இதுவே கூத்தில் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றது. இந்த இரு கூத்துக்களிலும் கூட இதன் ஆதிக்கத்தினைக்காண முடிகின்றது.

வெண்பாவின் பொது இலக்கணங்களைப் பெற்று நான்கடியாய்த் தனிச்சொல் இன்றி வருவது இன்னிசை வெண்பா எனப்படுகின்றது. கொச்சகம் என்ற பாவினத்தைச் சோக உணர்வு புலப்படப் பாடும் பொழுது அதற்கு இன்னிசை என நாடடுக்கூத்தாசிரியர்கள் பெயர் வழங்கியுள்ளனர். இராவண சொரூபத்திலும் இதன் இலக்கணங்கணங்கள் வழுவாமல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் வரும் போர் வீரன் இன்னிசை

"அயலவன் மனைவியை அண்ணனவன் கவர்ந்தால்
அவளைக் கொண்டவனுக்கில்லா வார்வமிவனுக்கேன்...."

என அமைகிறது. இவரது கூத்துப்பிரதிகளில் அகவல், வெண்பா ஆகிய பாக்களும் கலித்துறை, கட்டளைக் கலிப்பா, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கொச்சகம் முதலான பாவினங்களும் தரு, சிந்து, இன்னிசை, தாழிசை, ஆகிய பாவகைகளும் பயன்படுத்தியிருப்பது புலனாகின்றது. அத்தோடு ஆங்காங்கே தென்மோடிக் கூத்துக் குரியதான மொழி நடையிலே வசனங்களையும் பயன் படுத்தியிருக்கிறார்.

ஒரு மொழியை, அதன் இலக்கியத்தை, அதன் இசையை அதன் இயல்பான வழியில் நின்று பாடினால்தான் அது அம்மொழிக்குச் செய்யும் பெருமையாகும். புரியாது எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கப்படுத்தப்பட்டும், புரிந்து கொண்டுவிடக் கூடாது என மிகக் கவனமாக கற்பிக்கப்பட்டும், புலவர்க்கானது என ஒதுக்கப்பட்டும், கிடக்கின்ற தமிழிலக்கண, இலக்கியப் பெரும்பரப்பில் எளிதான நடையில் அமைந்திருக்கும் கூத்திலக்கியம் ஒரு கவனிப்புக்குரியதற்றதாக மாற்றப்பட்டிருப்பது ஒரு இலக்கிய வரலாற்றுத் தவறாகும். இந்நிலையுணர்ந்த ஆரையூர் அருளம்பலம் அவர்களின் சமூக உணர்வும், கவித்துவ பார்வையையும் நின்று நிதானித்து, எல்லோரும் எளிதில் விளங்கக்கூடிய கூத்துப்பிரதிகளாக வெளிப்படுத்திருக்கின்றன. இதுவே இன்றைய காலத்தின் தேவையுமாகின்றது.

க. மோகனதாசன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப்பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியருரை

மானிட வாழ்வை உணர்ச்சியோடு உருவாக்கி உருவகமாக்கி அம்மக்களின் பண்பாட்டு சின்னமாகவும், சொத்தாகவும் விளங்கும் கூத்தினை, பல்வேறுபட்ட பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டாலும், ஆரியக் கூத்து, தமிழ் கூத்து என்றும் காரண காரியத்துடன் அழைக்கப்படுகின்றது. ஆரிய மொழியினை "வடமொழி" என்றும், தமிழ் மொழியினை "தென்மொழி" என்றும் கூறுகின்ற வழக்காற்றுப்படி, ஆரியக் கூத்து வடமோடி என்றும், தமிழ் கூத்து தென்மோடி என்றும் பெயர்களின் பொருட்பொருத்தம் நிறுவி நிற்கின்றன. மோடி என்பது நெறி, பாங்கு என்னும் கருத்தினால், வடநெறி, தென்நெறி, வடபாங்கு, தென்பாங்கு, கூத்துக்கள் எனவும் அழைக்கப்படுவதைக் காணலாம். தமிழ் கூத்தினை தென்மோடி, தென்பாங்கு கூத்தெனவும் அழைப்பர். அதனாலேயே தமிழ் கூத்தியல் (தென்மோடி) என இந்நூல் பெயர் பெறுகின்றது. அதனால் தென்மோடிக் கூத்தின் சிறப்பியல்புகளில் சிலவற்றைக் சுட்டிக்காட்ட முனைகின்றேன்.

பசியும் பிணியும் நீங்கி, கலை வளம் சிறக்க, இன்ப உணர்ச்சி பெருகுவதனால் நாட்டு வளத்தின் சின்னங்கள் கூத்துக்களாகும். கூத்தானது அந்நாட்டு மக்களினுடைய இலக்கியம், இசை, நடனம் ஆகிய முத்தமிழ் கலை அறிவினையும் தூண்டி, உணர்ச்சியும் இன்பமும் ஊட்டி, அவர்களின் பழம் பண்பை வளர்க்கும் கருவிகளாகவும் அமைகின்றது. கலை, இலக்கியம், பண்பாடுச் சிறப்புக்களை விளக்கும் பழம்பெரும் கலைக் களஞ்சியங்களாக கூத்துக்கள் மிளிர்கின்றன. கூத்துக்கள் ஆடும் காலம் ஓரூரின் மகிழ்வும் கலையின்பமும் பொங்கி வழியும் காலமாகவே கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மோடிக் கூத்தின் கதைப் போக்கில் காதற்சுவைப் பயப்பதாக அமைவதே அதிகமாகும் என கூறப்பட்டாலும், இறைவனும் புலவனும், இராவண சொரூபம் எனும் இரு தென்மோடிக் கூத்துக்களிலும் வீரம், கோபம், அழுகைச் சுவைகளும் கொண்டவையாகவே கதைப் பாங்கிற்கேற்ப அமைக்கப் பட்டுள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கது. தென்மோடிக் கூத்துப்பாடல்கள் பொதுவாக இனிமைச்சுவை கொண்டது என்பது இலட்சணம். சோகப் பாடல்களிலும் இனிமையை ரசிப்பது மக்களின் இயல்பு. தென்மோடியில் அதிக நுட்பமும் கடினமுமான ஆட்டங்களும் உள்ளன. தென்மோடியில் வரவுப் பாடல்களை சபை படிப்பதுடன், விருத்தங்களை இழுத்துப் படிப்பதோடு, வசனங்களையும் இழுத்தே சொல்வர். இதில் தருவின் (பாடலின்) இறுதிப் பகுதியை மட்டும் பிற்பாட்டுக்காரர் தொடர்ந்து படித்து விட்டு பாடமுக்கான முழுத்தருவையும் பாடுவர். கூத்துப்பாடல்களை பாடும் முறையை அமைத்து காட்டும் ஒருவித சொற்கோப்பே தரு எனப்படும். தருப்படிக்கும் போது கூத்தர்கள் தருவுக்கேத்த தாளத்துக்கு ஆடுவர். இவ்வாறு கூத்துப் பாடலுக்கு தருப்பாடும் வழக்கம் தென்மோடிக்கு மாத்திரமே உண்டு. இம்மோடியில் ஆட்ட நுணுக்கம், உடல் வளைந்து குத்திமிதித்து ஆடுவதன் காரணத்தால் உடைகளும் பாரங்குறைந்தனவாகவே பூமுடி, பட்டுத்துணி, மணிகளால் செய்யப்பட்ட உடைகளையே அணிவர்.

வடமோடியில் வரும் "முத்திரைப் பல்லவி", எனும் பாடல் பொதுவாக தென்மோடியில் ஒரோவழி "முத்திரைப் பல்லவி" கூத்துப் பாடல்களில் விரைவிக் காணப்படுகின்றது. இப்பல்லவியின் போது மட்டும், பாடலின் முற்பகுதியாகிய பல்லவியையே திரும்பத் திரும்பப் படிப்பது தென்மோடியில் வருவதைக் காணலாம். ஆனால், வடமோடி போன்று அதற்கான "முத்திரைப் பல்லவம்" எனுமாட்டம் வராது. தென்மோடிக்குரிய ஆட்டமே ஆடப்படும். கூத்தைப் பழக்கிய அண்ணாவியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்லாரியுடனும், மத்தாளமடிக்கும் அண்ணாவியும், ஏட்டு அண்ணாவியும், பக்கப்பாட்டுக் காரரிருவர்களும் சேர்ந்ததே சபை எனப்படும். தென்மோடிக் கூத்தில் சபைக்கே கூத்தினை நடாத்திச் செல்லும் பெரும் பங்கு உள்ளது.

இவ்விரு தென்மோடிக் கூத்துக்களும், தென்மோடிக் கூத்துக்கான இலக்கிய, இலக்கண, இலட்சணத்தோடு மரபு மாறாத வகையில் ஆக்கப்பட்டுள்ளதனை, தென்மோடிக் கூத்தில் தெளிவுற அனுபவ அறிவுடையவர்கள் காண்பார்கள் என்பது எனது நம்பிக்கையாகும். கூத்துக் கலையினை வளர்ப்பதற்கு நாம் புதுமையிலிருந்து பழமைக்குத் திரும்புவதற்கான அவசியத்தை கல்விமான்களும் உணர்ந்து கொண்டு பல்கலைக் கழகங்களிலும் கூத்துக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளமையும் கூத்திற்கு புத்துயிரும், புதுஒளியும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

எமது இந் நூலுக்கு அகமகிழ்வோடு ஆசியுரை வழங்கிய முனைக்காடு நாகலிங்கேஸ்வர ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பரசுராமன் மானாக்கப்போடி ஐயா அவர்களுக்கும், நயவுரை வழங்கிய கலாபூசணம், முத்தமிழரசு, சரஸ்வதி கடாட்சகர் சாம்பசிவம் சிவாச்சாரியார் காயத்திரிபீட குருமுதல்வர் அவர்களுக்கும் அறிமுகக் குறிப்பை வழங்கிய க. மோகனதாசன், சிரேஸ்ட விரிவுரையாளர், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம் அவர்களுக்கும் கூத்துப் பிரதிகளை சீர்தூக்கி செவ்வை பார்தளித்த கிழக்கு மாகாணத்தால் கூத்துக்கான இளம் கலைஞர் பாராட்டைப் பெற்ற பல்கலை வித்தகரும் பட்டதாரியுமான ம. கேதீஸ்வரன் அவர்களுக்கும் மதிப்புரை வழங்கிய ஆரையம்பதியின் முதிசமும், மூத்த கலைஞருமான மு. கணபதிப்பிள்ளை (மூனாக்கானா) ஐயா அவர்களுக்கும், இந்தப் பிரதியின் கையெழுத்தை அச்செழுத்தாக வடிவமைப்புப்படுத்தி சிறப்பான முறையில் உருவாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளித்தவரும் நூலுக்கான அட்டைப் படத்தினை வடிவமைத்தவருமான அ. பூஸிதன் அவர்களுக்கும் பின் அட்டைக்கான தொகுப்பை வழங்கிய செ. தவராசரெத்தினம் (ஓய்வு சிலை ஆசிரிய பயிற்சி முகாமையாளர்) அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மூ. அருளம்பலம் (ஆரையூர் அருள்)
துளசி வாசம்
ஆரையம்பதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

பத்து மாதம் சுமந்து, பத்தியமிருந்து பெத்தெடுத்து
பேணி வளர்த்து, இந்த நிலைக்கு என்னை ஆளாக்கிய
அன்னை அன்னம்மாவுக்கும், பெற்ற நாடாகி
பெருமை சேர்த்த
உத்தமக் கலைஞர்கள், வித்தகர்களைப் பெற்றெடுத்த
முத்தார ஊரான ஆரையம்பதி அன்னைக்கும்
"தமிழ் கூத்தியல்" புத்தகத்தினை
சமர்ப்பணம் செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைவனும் புலவனும்"

தென்மோடி 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனும் புலவனும்

கூத்துப் பாத்திரங்கள்

அரசன் - செண்பகப் பாண்டியன்
மனைவி - பூங்குழலி
அரசசபைப் புலவர்கள் - நக்கீரர், பரணர், வரணர்
புலவர் - தருமி
இறைவன் - (இறைவன்)
பறையறைவோன் - சாம்பான்
இறைவன் மனைவி - மீனாட்சி

கதைச் சுருக்கம்

பாண்டிய நாட்டை செண்பகப்பாண்டிய அரசன் அரசாண்டகாலம். செண்பக பாண்டியனும் மனைவி பூங்குழலியும் மகிழ்வாக பாடி ஆடி இருந்த நேரம் பாண்டிய மன்னனுக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. பெண்களின் கூந்தலில் இருந்து வருவது இயற்கை மணமா? அல்லது செயற்கை மணமா? என்று சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள பறையறையவும், சந்தேகத்தை தீர்க்கும் பாடலுக்கு ஆயிரம் பொற்காசுள் வழங்கப்படும் என்றும், ஏழைப் புலவனாகிய தருமி என்பவனும் இவ் வறிவித்தலைக் கேட்டு, தனது வறுமையைப் போக்கிக் கொள்ளவும் திருமணம் முடிக்கவும், இறைவனுக்கு பூசை செய்யும் பூசகராகவும் ஆகி வாழ்வை சுவைத்துவாழ இப்பாடல் கிடைத்தால் நலமாகும் எனநினைத்து இறைவனான சொக்க நாதனை வேண்டி இறைஞ்ச, இறைவனும் புலவன் வேடம்தாங்கி தருமிக்கு பாடலை வழங்க விருப்புக் கொண்டு வந்து தருமிக்கு பாடலை வழங்குகிறார். பாடலைப் பெற்ற தருமி பாண்டியனின் சபைக்குச்சென்று பாடலை ஒப்புவித்து பரிசை தனக்கு கொடுக்கும்படி அரசனை வேண்டிநிற்க, அரசனும் மகிழ்ந்து புலவனைப் பாராட்டி பரிசினை வழங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்த போது புலவர் சபையின் தலைமைப் புலவன் நக்கீரர் பாடலுக்கு விளக்கம் கேட்க, தருமி தடுமாற்றமுற்று வெளியேறி திரும்பவும் இறைவனைக் காண்கிறான். தான்பட்ட அவமானத்தையும் அனுபவத்தையும் இறைவனிடம் கூறக், கோபமுற்ற இறைவன் தருமியையும் அழைத்துக்கொண்டு பாண்டியன் சபையை அடைந்து, தருமி கொண்டுவந்த பாடலில் குறைகண்டவர் யார்? என்ன குற்றம் என வினவ? நக்கீரர் பாடலை பாடச்சொல்ல இறைவன் பாடலைப்பாடுகின்றார். பொருள் குற்றம் உள்ளது என நக்கீரரும், இறைவனும் வாதாடுகிறார்கள். இருவருக்குமிடையே பலத்த சொற்போர் நடந்து, முடிவில் இறைவன் தன் உண்மைத்தோற்றத்தைக் காட்டுகிறார். நெற்றிக்கண் காட்டிலும் குற்றம் குற்றமே எனகூறிய நக்கீரரை நெற்றிக்கண்ணால் எரிக்கிறார் இறைவன். பாண்டியமன்னனும் பரணர், வரணர் ஆகிய புலவர்களும் இலக்கண வழு, வழா நிலையும் முடிவும் அறியாது நக்கீரர் உங்கள் பாட்டில் குற்றம் என்று சொல்லியதை மறந்து, மன்னித்து தமிழ்ச் சங்கப்புலவனை மீண்டும் தமிழ்ச் சங்கத்திற்கு தந்தருளும் என பாடி வேண்ட, மீனாட்சியுடன் சென்று பொற்றாமரை வாவியில் வீழ்ந்து கிடந்த நக்கீரரை எழுப்ப, நக்கீரர் தான் செய்த பிழையை உணர்ந்து இறைவனிடம் மன்னிக்கும்படி வேண்ட இறைவன் உமக்கு அகத்தியரைக் கொண்டு இலக்கணம் உரைத்து மீண்டும் தமிழ்ச் சங்க புலவனாக இருப்பாய் என்றும் தருமிக்கே அந்த பொற்கிழியை வழங்கும்படியும் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனும் புலவனும்
தென்மோடிக் கூத்து

காப்பு விருத்தம்

முக்கண்ணனான மூத்த சிவனின் ஆக்ரோசத்தின் முன்னால்
நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே என்றுரைத்த
நக்கீரன் நற்றமிழ் பற்றுறுதியைப் பாடியாட
விக்கின விநாயகர் திருப்பாதமது காப்பதாமே.

சீர்பூத்த பாண்டி நாட்டை திறல் பூத்து
　　பேர்விளங்க கோலதோட்சி
பார் போற்று செம்பகப் பாண்டியனும்
　　வார்பூத்த கொங்கை பூங்குழலி மையலிலே
கார்கூந்தல் வீசுவாச மியற்கையோ என்றெண்ணி
　　ஊர்போற்று புலவர் சபையிலுண்மையறிய நண்ணி
தார்மீக உண்மை சாற்ற வேண்டிய கதைபாட
　　நாவினில் நாமகள் சரஸ்வதியே வந்தருளே.

செண்பக பாண்டிய வாசற் கட்டியகாரன் வரவு
சபை விருத்தம்

சித்திரத் தலைப்பாய் சிரசணிந்து கவசம்பூட்டி
வித்தார மாலை பதக்கம் மார்பில் பூண்டு
பத்திரமாய் பாண்டிய நாட்டரசன் வாசல்
கட்டியகாரன் சபைதனில் தோற்றினானே.

சபைத்தரு

தன தந்தன தனதந்தன தானினா - தன
தன தந்தன தனதந்தன தானினா
தன தந்தன தனதந்தன தானினா - தன
தன தந்தன தனதந்தன தானினா

1. பாரோர் பணிந்திடு பாக்கியவான் - உயர்
   தேவர்கள் புகழ்ந்திடு தோளினான்.
   சீரோங்கு பாண்டிய மன்னவன் - வாசற்
   கட்டிய காரனும் தோற்றினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சீர்பெறு செந்தமிழ் வாழ்ந்திட - தினம்
சேவைகள் செய்திடு தாளினான்.
பாவாணர் புகழ் பாண்டிராசன் - சபைக்
கட்டிய காரனும் தோற்றினான்.

கட்டிய காரன் தரு

நன்னன்ன நானன்ன நானன்னா - நன்ன
நானன்ன நானன்ன நானன்னா
நன்னன்ன நானன்ன நானன்னா - நன்ன
நானன்ன நானன்ன நானன்னா

1. பண்புள்ள இன்னாட்டு மக்களே - நம்ம
பாண்டிய மன்னனும் வாரார்காண்.
அன்புடன் அவரடி போற்றிட - சேர்ந்து
அணி அணியாக வாருங்கோ.

2. பூபாலன் மனையாள் பூங்குழலியும் - நல்ல
பொற்சபை நாடியே வாரார்காண்
சங்கொலியோடு மணி முழங்க - பொற்
சாமரங்கள் கொண்டு வீசிங்கோ.

3. பூரண பொற்கும்பம் நிறுத்துங்கோ - எங்கும்
பூமாலை புணைந்துமே கட்டுங்கோ
சந்தணம் சவ்வாது பூசிங்கோ - தூய
பொன்னினால் ஆலத்தி ஏந்துங்கோ.

4. சீதளப்பூ மாமலர் தூவுங்கோ - தெரு
வீதியெல்லாம் பந்தல் போடுங்கோ
கொம்புகுழல் பம்பை கொண்டுதுங்கோ - இளம்
கோதையர்கள் நடன மாடுங்கோ.

5. மத்தள சல்லாரி அடியுங்கோ - சுத்த
மங்கள விளக்குகள் ஏத்துங்கோ
மகர தோரணங்கள் கட்டுங்கோ - பச்ச
வாழை கமுகுகள் நாட்டுங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியகாரன் வசனம்

பார் போற்று மரசன் பாண்டிய நாட்டுராசனும் பெண்சாதி பூங்குழலியும் கொலுவுக்கு வாரார்கள் நான் தெருவீதி போகின்றேன். சமுகம் எச்சரிக்கை வெகுபராக்கு ஒருவரும் பேசக் கூடாது. நான் போய்வருகின்றேன்.

பாண்டியன் பூங்குழலி வரவு

விருத்தம்

எட்டுதிக்குமுள்ள இசைவாணர் இசைபாடி ஏற்றிடும் ஏந்தலவன்
செந்தமிழ் எங்குமே செளித்து வளர்ந்திட சேவைகள் செய்யும்
-செம்மல்
பொங்கு தமிழ் இன்பம் தங்குதடையின்றி ஓடிட வழிவகுத்தவன்
மட்டள வில்லாத மதிநுட்பம் நிறைந்த மன்னர்க் கெல்லாம்
-மன்னவன்
மக்களது நலமே மன்னவன் நலமென்று மதித்தரசு மங்காது
-புரிபவன்
அங்கமதாய் ஒன்றிய சரிகுழல் பூங்குழலி தன்னருகே வரவே
கட்டழகு காரிகைகள் எட்டி நின்று இதமாக கவரிகள் வீசிவரவே
பட்சமுள்ள பாண்டிய மாமன்னன் பாரியாளுடன் சபை
-மேவினாரே.

சபைத்தரு

தனதந்தன தனதந்தன தானின - தன
தனதந்தன தனதந்தன தானினா
தனதந்தன தனதந்தன தானினா - தன
தனதந்தன தனதந்தன தானினா

1. தமிழ்கற்று மதியுற்றிடு வித்தகனாம்
நல்ல அமிழ்திலு மினியசொல் இனியனாம்
இடர் அறநாட்டை ஆட்சிசெய்
இளம் பாண்டியனும் சபைதோற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. என்நாளும் மாந்தரின்புற வாழ்ந்திட
நல்லாட்சி செய்திடும் ஏந்தலாம்
சொல்லினிய மனையாளோடு சேர்ந்து
சந்தோசமாய் சபை தோற்றினார்.

3. பன்னெடுங் காலத் தமிழினையென்றும்
பாங்கோடு போற்றிடு மன்னனாம்
புகழோடு புலவரை வாழ்விக்கும் பூவன்
பாண்டியன் சபை வந்து தோற்றினான்

பாண்டியன் பூங்குழலி தரு

நன்ன நன்ன நானே நன்னா - நன்ன
நானா நன்ன நானே நன்னா
நன்ன நன்ன நானே நன்னா - நன்ன
நானா நன்ன நானே நன்னா

பூங்குழலி

ஆவின் நறும் பாலெடுத்து - நானும்
ஆசையுடன் காய்ச்சி அதில்
பாலுடன் பழரசமும் சேர்த்து - அதை
ஆவலோடு கொண்டு வந்தேனையா

பாண்டியன்

ஆவின் பால் நிறத்தவளே - இனிய
பழரசமாய் சுவைப்பவளே
நீயிருக்க எந்தனக்கு வேறு - சுவை
பால் ரசமும் வேணுமோடி.

பூங்குழலி

போதும் போது முங்கள் குறும்பு - நானும்
கேட்கும் கேள்விக்கு பதிலியம்பும்
திங்களும் மும்மாரி பெய்து - நாடு
செழிப் போடிருக்கா மோவையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன்

மாதமும் மும்மாரி பெய்து - எங்கும்
சீதமோடு வயல் நிறைந்து.
தேசம் தானும் நிறைவோடு - என்றும்
தித்திப்போ டிருக்குது மயிலே.

பூங்குழலி

கொற்றந் தனைக் காவல் செய்யும் - படையால்
கோட்டை ஏற்ற முறுகின்றதோ.
எந்த விதம் என்றெனக்கு - இப்போ
ஏந்தலே எடுத்துரைப்பீர்

பாண்டியன்

தேச விசுவாசப் படைகள் - என்றும்
வீரத்துடன் இருப்பதாலே.
நாளும் மக்கள் பயமதின்றி - இங்கே
நலமுடனே வாழ்கின்றாரே.

பூங்குழலி

சத்திய வேதமதை மக்கள் - நன்கு
சமமாக மதிக்கின்றாறோ.
சைவமது மெய்யுரைக்கின்றதா - அதை
பொய்யின்றி எம்முன் புகழுமையா.

பாண்டியன்

எம்மதமும் சம்மதமாயேற்று - இங்கே
தம்மதமும் போற்றுகின்றார்.
நாட்டின் வளம் நீயறிய - இப்போ
நாட்டம் கொண்ட தேன் குயி.

பூங்குழலி

நாடு நலமுடன் இருந்தால் தானே - இங்கே
நாமும் இன்புற்றிருக்கலாமே.
கூடிவாழும் வாழ்வினிலே - என்றும்
குறைகளது வாராதையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்குழலி வசனம்

நாடு சிறக்க அரசன் ஆட்சி செய்தால் தான், நாமும் சிறக்க வாழலாம். புலவர்களும் நாட்டை புகழ்ந்து பாடுவர். அதனால்தான் நாட்டு வளம் கேட்டேன் அறிவீரையா.

பாண்டியன் விருத்தம்

அன்னமே அழகுள்ள வண்ணமானே தேனே
இன்னமுதே இனிய பூங்குழலியுனை மணந்ததாலே
இன்பமே கண்டு இனிமையாக வாழ்ந்தாலுமின்று
உள்ளத்தை கவரும் வாசம் கூந்தலில் நுகர்ந்தேன் நானே.

பாண்டியன் வசனம்

பூங்குழலி உன் கூந்தலில் வீசும் புதுவாசத்தால், புலவர்கள் சபையிலே புதப்பிரச்சனை வைக்கப் போறேன். அறியும் பெண்ணே.

பூங்குழலி வசனம்

புதப் பிரச்சனையா? அதை என்னவென்று எடுத்தியம் புங்கள் துரையே.

தரு

நன்ன நன்ன நான நன்ன நானா - நன்ன
நான நன்ன நான நன்ன நானா.
நன்ன நன்ன நான நன்ன நானா - நன்ன
நான நன்ன நான நன்ன நானா.

பாண்டியன் தரு

பூங்குழலி நானுரைக்கக் கேளும் - உன்
கூந்தலுக்கு இந்த மணம் ஏது?
பூவாடை நேர்த்தியாய் வீசுதே - அதன்
காரணத்தை நானறியக் கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்குழலி

கூந்தலிலே நறுமணம் வீச - நல்ல
வாசமலர்களைச் சூடவேணும்
ஏந்தலே என்னுடைய வேந்தே - மலர்
சூடினாலே வாசமது வீசும்.

பாண்டியன்

மாமயிலே மரகதமே கேளும் - இப்போ
கூந்தலில் மலர் சூடினாயா கூறும்
தேன் மதுரச் செந்தமிழே நீயும் - அந்த
சேதி தன்னை என்தனற்குச் சொல்லும்.

பூங்குழலி

மன்னவரே சொல்லும் மொழி கேளும் - நான்
வரும் போது தலைமுழுகி வந்தேன்.
வாசனைப் பொருள் பூசவில்லை - நீங்க
வரவழைக்க வீசமாக வந்தேன்.

பாண்டியன்

என்ன சொன்னாய் எழிழரசே - இந்த
பின்னமான கேள்விக்கு விடைகாண
உன்னுடைய உண்மைப் பேச்சினாலே - இதை
உயர்வான பொருளாக்கி விடையறிவேன்.

பூங்குழலி

கண்ணவரே என்னவரே கேளும் - அழகு
கூந்தலுக்கு மியர்கை மணமுண்டோ?
உண்மையாக உரைப்பேன் நானும் - எந்த
கூந்தலுக்கு முயர்ந்த மணமிருக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் கவி

கொவ்வைக் கனியிதலே கொஞ்சும் கிளிமொழியே
மௌவல் கொடியேயுன் கார்கூந்தல் வீசும்மணம்
இயற்கையோ? செயற்கையோ? என்று அறிந்திடவே
இன்னகர் புலவர் குலாமிடம் எடுத்துரைத்து
இதற்கான விடையை ஆய்ந்து அறிந்திடவே
அடியேன் ஆவணசெய்து உண்மையறியாது விடேன்.

பாண்டியன் வசனம்

அன்புள்ளமானே! இன்புடன் இந்த கூந்தலின் மணம், இயற்கையோ? செயற்கையோ? என்றறியாது விடமாட்டேன். நீயுன் இருப்பிடம் செல்வாயாக.

சாம்பான் வரவு
சபை விருத்தம்

பழய கள்ளினைக் குடித்து பறைதனைத் தோளில் போட்டு
பையப்பைய நடந்து பாண்டியன் கட்டளை கேட்டு
வையகத்தோர் காதில் மாண்புடன் சேதி கூறிட
டாம்! டாம்! எனப் பறையறைந்து சாம்பானும் வருகின்றானே.

சபைத்தரு

தனனத் தானின தான தனனத் தானினதான
தனனத் தானின தான தானினா

1) இறைவன் பாண்டிய மன்னன் எடுத்துரைத்த செய்தி
இடித்துரைக்கச் சாம்பான்சபை தோன்றினான்

2) பறைதனை தோளில்போட்டு பாங்கயாய் நடைநடந்து
தள்ளாடித் தள்ளாடிச் சாம்பான் தோற்றினான்

சாம்பான்தரு

தனனா தனனா தனதனனா - தன
தனனா தனனா தனதனனா.
தனனா தனனா தனதனனா - தன
தனனா தனனா தனதனனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பறையறைகிறேன் ஊரவரே எங்கள்
பாண்டியன் கட்டளை ஊரவரே.
குடிமயக்கம் கூட இருக்குது - குந்த
இடமில்லை ஊரவரே.

2) பாசாங் கோடென்னைப் பார்க்கிறீரே - என்னை
ஆரென்றறிவீரா ஊரவரே.
பாரதைப்படைத்த பரமனைப் போற்றுமென்
பாதத்தைப் பணியுங்கோ ஊரவரே.

3) மூப்பனென் றென்னைக் கூப்பிடும் - பெரியோர்
முற்றும் உணர்ந்தவர் ஊரவரே.
வாய்ப்பாய்ப் பதினென் சித்தருடன்
வள்ளுவன் என்பவன் நான்தானே.

4) ஆள்கடல் சூழ்புவி அனைத்திலு - முள்ள
புலவரும் இதனைக் கேட்டிடுங்கோ.
வாழ்நாளில் கிடைக்கா சந்தர்ப்பத்தை
வளமாக நீங்களும் பெற்றிடுங்கோ.

5) பாண்டியன் செய்தியைப் பகருகின்றேன் - நான்
பணிவுடன் நீங்களும் கேட்டிடுங்கோ.
வாஞ்சையுடனே எல்லோரும் வந்து
இப்போட்டியில் பங்கு கொண்டிடுங்கோ.

6) மணம் என்னும் சந்தேகம் வந்ததினால்
மன்னன் பறைதனை அறையு மென்றார்.
கார் கூந்தலிலே கடிமணம் கண்டிப்பாய்
வீசிடும் காரணம் கூறிடுவீர்.

7) இயற்கையில் இம்மணம் வீசுறதா? - என்று
முயற்சித்து உண்மை கூறிடுங்கோ.
செயற்கையால் இம்மணம் வருகிறதா - அந்த
சேதியைத் திடமாய் கூறிடுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பான் கவி

இயற்கையில் கூந்தலுக்கு இருக்கிறதா இந்த மணம்
இல்லை, செயற்கையில் வந்ததுவோ சேதிநன் கறிந்தவர்கள்
மன்னனின் சந்தேகம் தீர்க்க மான்புறு கவிதைவடித்து
அன்னவர்க்கு சொல்பவர்க்கு ஆயிரம் பொற் காசுகளாம்.

சாம்பான் வசனம்

மாதர்கள் கூந்தலுக்கு இயற்கை மணமா? செயற்கை மணமா? அறிந்து சொல்பவர்க்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு. இதுதான் பாண்டி மன்னன் செய்தி அறிவீர்களாக.

தருமிவரவு

சபை விருத்தம்

ஆயிரம் பொற்காசி என்று அறைந்திட்ட பறையைக்கேட்டு
ஆனந்தமாக அதைப் பெற்றுமே வாழவென்று
அரசனின் தித்திக்கும் செய்தி கேட்டங்கலாய்புக் கொண்டு
சிந்தையில் ஆசைகொண்டு சீக்கிரம் தருமி சபைவந்தானே.

சபைத்தரு

தந்தன தந்தன தானா - தன
தந்தன தந்தன தானா.
தந்தன தந்தன தானா - தன
தந்தன தந்தன தானா.

1. வீரனாம் உயர் சூரனாம் - நல்ல
வித்தை கற்றிடு தீரனாம்
தாரணி அறிந்த புலவனாம் - தமிழ்
கற்றிட்ட தருமியும் தோற்றினான்.

2. பாண்டி நாட்டின் கவிஞன் - மிக
வேண்டிடு கவி தருபவன்
ஆண்டி டரச னறிவிப்பால் - வந்த
ஆசையால் தருமியும் தோற்றினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமிதரு

தந்தன்னா தந்தன்னா தன தந்தன்னானா - தன
தான தானின தந்தன்னா தன தந்தன்னானா

1. சிந்தையிலே துதித்தேன் சிவனேயுன்னை - வந்து
   காருமையா உதவி தாருமையா
   எந்தையே ஏழையென்று மேழைதானோ - நேரே
   வாருமையா அருளைக் தாருமையா.

2. மன்னவன் பாண்டியன் செய்திகேட்டு - மனம்
   மலருதையா உள்ளம் உருகுதையா
   செந்தமிழ் தெய்வமே தீந்தமிழில் - ஆசை
   பொங்குதையா மனம் தங்குதையா.
3. ஆயிரம் பொற்காசி நானும்பெறவே - அருள்
   செய்குவாயே நானு முய்யுவேனே
   அடியேன் என்றுமிங் கேழைதானோ - உன்
   அன்புதாரும் என்முன்பு வாரும்.

4. கோழையாக என்றும் வாழ்வதோநான் - இந்த
   வேளைவாரும் எனக்கு மீள்வைத்தாரும்
   பார்வதி வலப்பாகா பரிசைத்தாரும் - இப்போ
   அருகில் வாரும் என்வறுமைதீரும்.

தருமி இன்னிசை

ஏழைப் புலவன் என்னை எந்த நாளும் கோழையாக
வைத்திடாது கொடுக்கும் பரிசதனை நான் பெற்றிடவே
கிடைக்க வழிதனையே எந்தனற்கு நீர்காட்டி
வறுமைதனை ஒளித்து இனிமைகூட்ட வென்னருகே வாருமே.

தருமி வசனம்

சொக்கநாதா! தில்லையில் கூத்தா! தென்பாண்டி நாட்டா! அல்லல் அறுத்து ஆனந்த மளிக்க, ஆயிரம் பொற்காசுகளைப் பெற, ஆண்டவனே அருள் செய்குவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் வரவு

சபைவிருத்தம்

சொக்கனென தருமி சொல்லி அழைத்திடும் வேளை தன்னில்
மிக்க சிவன் சிந்தையிலே அறிந்துமே தானும் அப்போ மெற்ற
மகிழ்வுடனே புலவன் வேடம் புனைந்துமே இறைவன் தானும்
தக்க பாட்டே டதனைக் கையி லேடுத்துக் கொண்டு
கண்டவர் தெண்ட னிட்டு பணிந்துமே வாழ்த்துக் கூற
தருமியும் வருந்தி யழைத்து வழிபடும மாலயத்தே
கருணை கொண்டு சந்தேகம் தீர்த்திடும் திடத்துடனே
உருமாறியே இறைவன் சபை வந்து தோற்றினாரே.

சபைத்தரு

தனதத்த தன தானினா தனதத்த தன தானினா
தனதத்த தன தானினா தன தானின தான

மாறுவேடம் பூண்டுமே வளமான புலனாய்
பாரோர் பணிபரம சிவன்வந்து தோற்றினார்
ஏடும் கையில் எடுத்துமே இலங்குதாடி துலங்கவே
பாடும் புலமைப் புலவனாக சபை தோற்றினாரே.

இறைவன்தரு

நன்னன்ன நானன்ன நானன்னா - நன்ன
நானன்ன நானன்ன நானன்னா

1. புலவருக் கெல்லாம் புலவனாய் - மூன்று
உலகிற்கு மென்றும் தலைவனாய்
அழுது அழைத்திடும் தருமிக்காய் - நானும்
வழுவாது சென்றவன் முன்நிற்பேன்.

2. கலைகளுக் கெல்லாம் தலைவனாய் - நல்ல
புலமையிற் சிறந்திட்ட புலவனாய்
நானிலம் போற்றிடு மிறைவனாய் - பாடு
தேவாரப் பாட்டுக்கும் முதல்வனாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாண்டியன் வேண்டிநிற்கும் பாடலை - மிகப்
பாங்குடன் புனைந்திட்ட கவிஞனாய்
வேண்டிநிற்கு மேழைத் தருமிக்கு - பாடல்
கொண்டு கொடுப்பேனவனுக்கு பரிசிக்கு

இறைவன் வசனம்

ஆதிசைவருள் ஒருவனான, இல்வாழ்க்கையின்றி, என்பூசைக்கு அருகனானேனென்றும், பாண்டியனுடைய மனக் கருத்தறிந்து, பாடலியற்றிப் பரிசுபெற வழிகாட்டு என்று, வருந்துகின்றவன் முன் பாட்டோடு செல்வேனே.

தருமி கொச்சகம்

பாண்டியன் சந்தேகம் தீர்க்கும் பாடலது புனைந்தால்
பெற்றிடலாம் ஆயிரம் பொற்காசி தன்னை
சொக்க நாதா செந்தமில் ஏழை என்தனற்கு
தந்து உதவிட வந்திடு என்தன் முன்னே

தருமிவசனம்

நல்முத்து பஞ்சனையில் மீனாட்சியோடிருக்கும் சொக்கநாதா, உன் பூமுத்துச் சொற்பாடல்தர, உன்வாய் முத்து சிந்திடுமா? வந்தருள் செய்திடையா.

இறைவன் கொச்சகம்

பாண்டியன் ஐயமது போக்கும் பாடலது
வேண்டியிறையை வருந்தி அழைப்பவரே
உந்தனற்கு அப்பாடல் கிடைக்க உதவிடவே
வந்திருக்கு மென்னை சொந்தமுடன் பாருமையா.

இறைவன் வசனம்

பாண்டியன் சந்தேகம் தீர்க்கும் பாடலோடு, வந்திருக்கும் புலவன் என்னைப் பாரும். நானுனக்குப் பாடலைத் தருகின்றேன் பெற்றுக் கொள்வீராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமி கொச்சகம்

தண்டோராப் போட்டதனை நீங்களும் நிண்டு கேட்டு
என்தன் வயிற்றில் அடிக்க என்முன்னே வந்தீரோ
பார்ப்பதற்கு நீங்கள் வசதியுள்ளவராய் தோன்றிறீரே
பாட்டினைத் தரவந்த நீங்கள் யாரோ உரைப்பீரே.

தருமி வசனம்

நீங்கள் எழுதிய பாட்டை கொண்டு சபைசெல்லாமல், என்னிடம் கொடுத்திட வந்த நீங்கள் யார்? என்பதனை உரை செய்வீரே.

இறைவன் கொச்சகம்

சொற்சுவை பொருட்சுவை எல்லாம் ஒன்றாய்க் கூட்டி
சுந்தரத் தமிழில் முத்தான பாட்டுக் கட்டி
செம்மொழிச் செந்தமிழ் கவிபாடும் புலவன் நான்
சந்தேக மிருந்தால் பரீட்சித்துப் பார்ப்பீரே.

இறைவன் வசனம்

நானோர் நற்புலவன் நீ வேண்டும் பாட்டை எழுதி வந்திருக்கின்றேன். என்புலமையில் சந்தேகமிருந்தால், பரீட்சித்துப்பாரும், உமக்குத் திறமையிருந்தால்.

இறைவன் தருமி தர்க்கத்தரு

நன்னன்ன நானன்ன நானே நன்னா நானேநன்னா - நன்ன
நானன்ன நானன்ன நானே நன்னா நானேநன்னா.

தருமிதரு

பிரிக்க முடியாதது என்னஎன்ன? என்னஎன்ன?
பிரிக்க கூடாதது ஏதுசொல்லு? ஏதுசொல்லு?

இறைவன்தரு

தமிழையும் சுவையையும் பிரிக்கேலாது, பிரிக்கேலாது.
எதுகை மோனையது பிரியக்கூடா! பிரியக்கூடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமிதரு

சொல்லக் கூடாதது என்ன கூறும்? என்ன கூறும்?
சொல்லக் கூடியதை சொல்லும் சொல்லும்! சொல்லும்
-சொல்லும்!

இறைவன்தரு

பெண்ணிடம் ரகசியம் சொல்லக்கூடா! சொல்லக்கூடா!
உண்மையின் தத்துவம் சொல்லக் கூடும்!
-சொல்லக் கூடும்!

தருமிதரு

சேர்ந்தேயிருப்பது ஏதுசொல்லும்? ஏதுசொல்லும்?
சேராதிருப்பதைக் கூறும்கூறும்? கூறும்கூறும்?

இறைவன்தரு

வறுமையும் புலமையும் சேர்ந்திருக்கும்! சேர்ந்திருக்கும்!
அறிவும் பணமும் சேராதிருக்கும்! சேராதிருக்கும்!

தருமிதரு

பார்க்கக் கூடாதது யாது யாது? யாது யாது?
பார்த்து ரசிக்கக் கூடியதை ஓதுஓது? ஓதுஓது?

இறைவன்தரு

பசியும் பஞ்சமும் பார்க்கக் கூடாது! பார்க்கக் கூடாது!
கலையுமழகும் ரசிக்கக் கூடும்! ரசிக்கக் கூடும்!

தருமி வசனம்

சந்தேகமேயில்லை நீங்கள் புலவர்தான். நான் இப்பாடலைக் கொண்டு, சங்க மண்டபம் சென்று, பாடலைக் கொடுத்து பரிசு பெற்று வருகின்றேன் புலவரே.

இறைவன் வசனம்

வெற்றியுனதே! சென்றுவா! பொற்கிழியைவென்றுவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்வரவு

சபைவிருத்தம்

தமிழ் சங்கப் புலவரெல்லாம் தாள்பணிந்தன் போடு
தமிழ் சங்கத் தலைவனென்று சாற்றியே போற்றி செய்யும்
செந்தமிழ் சிறக்க காவியங்கள் சிறப்புடனே செய்யும்
வித்தக நக்கீரன் புலவர்களோடு சங்கமண்டபம் வருகின்றாரே.

சபைத்தரு

தனனத்தனதன தனனத்தனதன தனனத்தனதன தானினா
தனனத்தனதன தனனத்தனதன தனனத்தனதன தானினா

1. சங்கத்தில் தமிழ் வளர்ப்பவன் - நல்ல
வித்தக வினோதம் நிறைந்தவன்
முத்தமிழ் வளர்ப்பதில் மூத்தவன் - உற்ற
சங்க மண்டபம் வந்து தோற்றினான்.

2. எத்திசைப் புலவரும் போற்றவே
இந்திராதி தேவர் ஏற்றவே
சுந்தரத் திருமுகம் தோற்றவே - கீரன்
வந்து மண்டபம் தோற்றினான்.

நக்கீரன்தரு

தனனத் தனன தன தானினா - தான
தனனத் தனன தன தானினா

1. சங்கம் வைத்து தமிழ் வளர்த்துமே - நாட்டு
பாண்டிய மன்னனை வாழ்த்தியே
நேர்த்தியாய் தமிழ்த் தொண்டு செய்துமே - நல்ல
காத்திரமாய் தமிழ் செய்குவேன்.

2. திறமை கொண்டு கலைகள் ஓங்கவே - இலங்கு
திலகம் போன்று மன்னர் வாழவே
நிலையில்லாப் புகழ் தனை நீக்கியே - என்றும்
நிறைவான சேவையைச் செய்குவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரர் வசனம்

பாண்டிய மன்னன் கொலுவிருக்கும் சங்க மண்டபம் சென்று புலவர்களோடு சர்ச்சைக்குரிய விடை காண்பேன்.

பாண்டியன். நக்கீரன் தரு

நன்னன்ன நான நன்ன நானநானா - நன்ன
நானன்ன நானன்ன நானநானா

பாண்டியன்தரு

எந்தன் சந்தேகம் தன்னைத் தீர்க்க - நீங்க
என்ன செய்தீரென்று எடுத்து ஓதும்.

நக்கீரன் தரு

வீரனே வீராதி வீர வேந்தே - இப்போ
சூரனாம் நீங்க சொன்ன சொற்கள் தவறே.

பாண்டியன்தரு

என்ன சொன்னீர் தலைமைப் புலவரே - நீரும்
எழுந்த சந்தேகம் தீர்க்க வழியதில்லையா?

நக்கீரன் தரு

புலமை வெல்ல போட்டியாயின் மன்னவா - இப்போ
புதுப்புதுப் பாடல்களை குவித்திருப்போமே.

பாண்டியன்தரு

முத்தமிழ் சங்கத்திலே தீர்வில்லை யென்றால் - இந்த
முழுவுலகு மதை கேலி செய்யாதோ?

பாண்டியன் வசனம்

மன்னனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை சங்கம் தீர்க்கா விட்டால், உங்கள் புலமையை உலகே கேலி செய்யுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமி இன்னிசை

பார்வேந்தே பாராளும் தார் வேந்தேயிந்தப்
பாட்டோடு வந்திருக்கு ஏழைப் புலவனென்னை
ஆயிரம் பொற்காசுகளை ஆசையுடன் பெற்றிட
ஓடிவந்த எந்தனக்கு தந்திடுவீரப் பரிசதனை.

பாண்டியன் வசனம்

உன் புலமை வாழ்க! என் சந்தேகம் தீர்க்கும் பாடலை எங்கே, கொண்டு வந்திருக்கிறாயா? எங்கே பாட்டைப் படியும்.

தருமி கவி

கொங்குதே வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
அஞ்சிறைத் தும்பிகாமன் செப்பாது
கண்டது மொழியுமோ கேளீர்மயிலியது
செறிய இவ்வரிவை கூந்தலின் றியளமுளதோ
நீயறியும் பூவே நீயறியும் பூவே.

பாண்டியன் வசனம்

ஆகா! அற்புதமான பாட்டு ஆழ்ந்த கருத்து, சங்கம் தீர்க்காத சந்தேகத்தை தனிப் புலவனாக வந்த தருமி தீர்த்து விட்டாய். அந்த பொற்கிழியைக் கொண்டு வாருங்கள்.

நக்கீரர் கொச்சகம்

மன்னவா சற்றே பொறும் புலவரே நீரிங்கேவாரும்
இப்பாடலை எழுதியது நீராகிலதன் பொருளுரைத்து
அப்புறம் அரசரிடம் அப்பரிசை பெற்று ஏகுவீரே.

தருமி வசனம்

போய்யா! நீராரையா குறுக்கேவர! அதுதான் அரசனுக்கே விளங்கித்து. பாட்டில குற்றம் கண்டு பெயர் வாங்க வந்த புலவனா. எனக்கு பரிசும் வேண்டாம், ஒன்றும் வேண்டா மாளைவிடுங்க. நான் வருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமி பல்லவித்தரு

அவமான மாச்சே அதனால் தன்மானம் போச்சே
அவமான மாச்சே வருமானமும் போச்சே

தவறான பாட்டென்று அறியாது நானுமே
அவதூறு சொல்லியே தலைமைப் புலவனென்னை
கேட்டானே கேள்வி பாட்டை எழுதியதாரென்று
அதனாலே, குட்டுப்பட்டேனே அங்கே நானும் முட்டுப்பட்டேனே
(அவமான)

எந்தன் புலமையை யினியாரும் மதியாரே
பித்தன் என்றறியாது மெத்த மனங்கொண்டு
தந்திட்ட பாட்டை நான்கொண்டு சென்றதால்
வந்திட்ட வினையால் நொந்து தவித்துமே
புலமையிழந்தேன் எல்லார் முன்னும் நிலமை தளர்ந்தேன்
(அவமான)

எல்லை யில்லாத சொல்லால் மிரட்டியே
துன்ப சாகரத்தில் தூக்கி யெறிந்ததாலே
ஆசை காட்டி யென்னை மோசம் செய்வித்து
பாட்டினைத் தந்துமே ஏய்த்திட்ட எத்தனை
கூப்பிட மாட்டேன் அந்த சொக்கனை பார்த்திடமாட்டேன்
(அவமான)

தருமி வசனம்

கூப்பிடமாட்டன், கூப்பிடவே மாட்டன், அந்த மீனாட்சி, சுந்தர சொக்க நாதனக் கூப்பிடமாட்டன், கூப்பிடமாட்டன்.

இறைவன் வசனம்

பரிசு கிடைத்ததா? புலவரே.

தருமி வசனம்

உதை மட்டும் தான் கிடைக்கல்ல. சபையில, தலமைப்புலவனாம், உங்க பாட்டில குற்றமாம், என்று கூறி அவமானப்படுத்தி அனுப்பி விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் கொச்சகம்

தலைமைப் புலவனனென்ற செருக்கோ மிடுக்கோ
-தலைக்கனமோ?
புலமை முழுவது மறிந்த இறைவன் என்று அறியானோ?
கற்பூரத்துக்கு உப்பு இணையாமோ இலக்கணமறியாத -
-அவனின்.

தரு

இலக்கண மறியாத் தலக்கணம் கொண்டவன் எப்படி
அப்படி தப்படி பாட்டிலே காண்பான்
அவன் தலைதனைப் பிடித்துமே சபைதனில் மோதியே
நிலைமை தனை உரைத்திட வாறேன்.

இறைவன் கொச்சகம்

முத்தமிழ் கற்றவன் முழுதுமேயறிந்த முடிவில்லா தளகத்த
-னென்னை
முற்றாக அறியானோ? உண்மைகள் தெரியானோ? புரியானோ?
கொத்திக் கிளறும் வான்கோழி கோல கலாபத்திற்கு
இணையாகாதென காட்டவாறேன்.

தரு

உன்னை இகழ்ந்தவன் என்னையே இகழ்ந்தவனாவான்
உயர்வான பழியதை அறியாது மரியாதை புரியாது சுமத்தியே
-விட்டான்
அந்தப் பார்சபை தன்னிலே கூசிடவே அவன்
பாட்டையும் ஆட்டையும் சேட்டையும் மடக்கிடவாறேன்.

இறைவன் கவிதை

இப்புலவன் கொண்டு வந்த பாட்டில் அப்படி பிழை கண்டவன்
-யார்?
செப்படி வித்தை புரிந்து சிரித்து மகிழ்ந்தவன் யார்?
எப்படி அவன் குற்றமுரைபா னனைத்து மறிந்தவனோ?
செப்பு வீரந்த திறன் அற்ற பொய் புலவன் யாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் கவி

அன்புடன் அறியக் கேட்டால் அதற்குப் பதில் கிடைக்கும்
பண்பற்ற வார்த்தை கூறவிது துன்புறு இடமில்லையே
திண்ணமாய் முடிவு காணும் முத்தமிழ் சங்க மன்றிதுவே
அன்னதனாலே உண்மையை அமைதியாய் அறிகுவீரே.

பாண்டியன் வசனம்

அவனிவனென்ற ஏளன வார்த்தைகள் இங்கு பேசவேண்டாம். இது முத்தமிழ் சங்க மண்டபம். பாட்டில் குற்றம் சொன்ன சங்கத் தலைவனை தகாத சொற்களால் விழிக்க வேண்டாம்.

இறைவன் வசனம்

அதனால் தான் பாட்டில் குற்றம் கண்டாரோ? எல்லா மறிந்த இந்தக் கிழம் யாரோ?

நக்கீரன் கொச்சகம்

நல்ல நல்ல பாட்டினிற்கே நாங்கள் பரிசு கொடுப்போம்
நல்ல பாட்டாயினும் பிழையிருந்தா லதைத் தடுப்போம்
நற்சங்கத் தலைவ நற்கீரன் என் பொறுப்பிதுவே
உன்பாட்டில் குற்றமுண்டு உண்மையை உணரச் செய்தேன்.

நக்கீரன் வசனம்

பாட்டை எழுதிய நீர் வராமல், இன்னொருவரிடம் கொடுத்தனுப்பியதே குற்றமுள்ள மனம் குறுகுறுத்ததாலோ? கேட்டால் நடந்தது முடிந்த தென்பாய். உன்பாட்டில் குற்றம் உண்டு, அறிவீராக.

இறைவன் வசனம்

என்பாட்டில் என்ன குற்றம் கண்டாய், சொற் குற்றமா? பொருட் குற்றமா? கூறுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன் வசனம்

சொல்லில் குற்றமில்லை, பொருளிலேதான் குற்றமுண்டு, எங்கே, உம்முடைய பாட்டைச் சொல்லும்.

இறைவன் (கவிதை)

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ?
பலியது கெழிலிய நட்பின் மயிலியற் செறிய
இவ்வரிவை கூந்தலின்றறியுமுளதோ நீயறியும் பூவே.

நக்கீரன் வசனம்

உமது செய்யுளின் உட்கருத்து யாது?

இறைவன் கவி

மலர்களில் மகரந்தந் தன்னை மகிழ்வுடன் அறியும் வண்டே
மங்கையின் கூந்தல் மணத்தை விட கண்டது முண்டோ
மகிழ்வுடனே சொல்லிவிடு தும்பியின வண்டே
பெண்களில் கூந்தல் வாசம் பெரிதாக விளங்கும் தானே

நக்கீரன் வசனம்

தாங்கள் முடிவாகக் கூறும் கருத்து.

இறைவன் வசனம்

மங்கையர் கூந்தலுக்கு இயற்கை மணமுண்டு.

நக்கீரன் வசனம்

வாசனாதி திரவியங்களை அல்லது நறுமண மலர்களை சூடினாலன்றி, கூந்தலுக்கு இயற்கை மணம் கிடையாது.

தரு

நன்னன்ன நானன்ன நானன்னா - நன்ன
நானன்ன நானன்ன நானன்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன் தரு

அத்து மீறிநீயும் பேசிறாய் - மெத்த
ஆணவம் கொண்டுமே சீறுறாய்
எந்தப் பெண்கள் கூந்தலுக்குமே - எந்த
இயற்கை மணமுமே இல்லையே.

இறைவன்தரு

எந்தன் பாட்டில் பிழை பிடித்து - சொல்ல
உந்தனக்கு திறமை உண்டோதான்?
உயர்ந்த சாதி பெண்களுக்கும் - நல்ல
உயர்வான மணமது இல்லையோ?

நக்கீரன் தரு

ஈசன் இடப்பாக மமர்ந்திட்ட - அந்த
ஈஸ்வரி கூந்தலில் கூட
இயற்கை மண மென்பதில்லை - அதை
ஏற்க நீ மறுப்பதே தொல்லை.

இறைவன்தரு

நரைத்த தலைமுடிக் கிழவனே - நீரும்
நற்றமிழ் பற்றி யறிவாயோ?
குரைத்துமே கொதிப்பாய் பேசிறாய் - அந்த
கொஞ்சும் தமிழ் கொஞ்சம் கூறுவாய்.

நக்கீரன் தரு

எல்லா மறிந்தவனா யிருக்கலாம் - நீ
பொய்யுரை செய்வதையேன் தடுக்கேலா?
அமிழ்தான மொழி மீதிலானை - நீயும்
அநியாயமாகப் பழி கொள்கிறாய்.

இறைவன்தரு

தீந்தமிழ் இலக்கண மறியாது - நீரும்
தீது சொல்லி மழுப்புறாய்
வாது செய்தென்னை வென்றிட - உன்னா
லாகாது புரிந்து நீ சென்றிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன் தரு

என்னதான் சொல்லியும் எதிர்க்கிறாய் - ஏன்
என்தன் பேச்சை நீயும் மடக்கிறாய்?
உன்னை நான் நன்கு அறியேனோ? - வித்தை
உன்னியே ஞானத்தை காட்டுராய்.

இறைவன்தரு

நக்கீரா நன்றாக என்னைப்பார் - இப்ப
நிக்காதே என்முன்னே ஓடிப்போ!
எந்தன் பாட்டின் மீது குற்றமா? - அதை
எடுத்துச் சொல்ல உன்னால் முடியுமா?

நக்கீரன் தரு

நெற்றிக்கண் காட்டிலும் குற்றம் குற்றமே - நீ
முக்கண் முதல்வனு மாகுக
செப்பிய வார்த்தையில் தீதில்லை - ஐயா
ஒப்புக் கொள்ள வேண்டு முண்மையை.

இறைவன்தரு

சங்கை கீர்கீரென்று அரிந்திடும் - நக்
கீரா என்கவி ஆயமுடியுமா?
சங்கை தனைக்காட்டி நிற்கிறாய் - உயர்
சங்கத் தலைவனென்ற மமதையோ?

நக்கீரன் தரு

சங்கறுப்ப தெங்க வம்ச குலம் - ஆனா
சங்கரனுமக் கேது குலம்
சங்கை யரிந்துண்டு நாம்வாழ்வோம் - சிவா
உன் போலிரந்துண்டு நாம் வாழோம்.

இறைவன் வசனம்

என்னை எதிர்த்துப் பேசிய நக்கீரனே. இப்போதே என் நெற்றிக்கண் நெருப்பினால் எரிந்து போவாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன், பாண்டியன், புலவர்களாகிய கபிலர், வரணர் தற்கத்தரு

தனனா தனதானினா தானினத் தானா தனனா
-தனதானினா
தனனா தனதான தனனா தனதான தனனா தனதான
-தானின தானா

பாண்டியன்தரு

திருத்தனே சரணமையா, சென்னிமேல் நிருத்தனே
-சரணமையா
அருத்தனே சரணமையா, திருவாலவா யொருத்தனே
-சரணமையா
அறியாமல் நக்கீரன் எதிர்வாதம் செய்திட்டான், (சுரள்)
அவன் குறை பொறுத்து மீட்டுத்தர வேண்டும் இறையே.

பாண்டியன் தரு

நக்கீரன் இல்லாத, முத்தமிழ் சங்கமெப்பபடி
-இயங்குமையா
வக்கிரம் காட்டாமல், மனது வைத்து மன்னித்து
-நீருமையா
எங்கள் சங்கத் தலைவன் தன்னையே மன்னித்து (சுரள்)
திங்கள் சடையணிந்த தேவே எழுப்பிதாருமையா.

வரணர்தரு

கல்விச் செருக்கதனால், அறிவிழந்து செய்யுள்
-பிழையதென்றார்
வல்வினை தீர்த்தருளும், எல்லாம் வல்ல பரம்பொருளே
உங்கள் பொற்பாதம் தனைப்பணிந்தோம் பொறுத்துமே
(சுரள்) பொற்றாமரை வாவிவிட்டு நக்கீரனை
-வரவைசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன்தரு

1) உலகமாதா ஞான, பூங்கோதை யம்மை கூந்தலுக்கு
அகலாத தீங்கு சொன்ன, கொடிய நாவின்
-குற்றத்திற்கு
அவனை எரித்தேன் நெற்றிக் கண்ணலேதான் (சுருள்)
நீங்கள் கேட்டபடியே எழுப்பித்தருவேனஞ்ச
-வேண்டாம்.

2) அற்ப வித்தையுடையோர், மகா கருவமுடையா
-ரென்பதற்கு
நற்றமிலிலக்கிய வழு, வழாநிலையறியாமலே
நக்கீரன் செய்திட்ட அக்குற்றத்திற்காக (சுருள்)
சுட்டேன் நெற்றிக்கண்ணால் சுறுக்காயெழுப்பித்
-தந்திடுவேன்

பாண்டியன் வசனம்

எம்பெருமானே! புண்ணியம் செய்தவற்கு இன்பத்தையும், பாவம் செய்தவருக்கு துன்பத்தையும் கொடுப்பது உமது திருவருள் இயற்கை உயிர்களுக்கெல்லாம் தாயும் தந்தையுமாகிய நீங்கள், நக்கீரன் பிழை பொறுத்து, சங்கத் தலைவனாக இயங்க வைப்பீர்கள் சுவாமி.

இறைவன் வசனம்

சோமசுந்தராகிய நானும் மீனாட்சியும் பொற்றாமரை வாவியில் வீழ்ந்து கிடக்கும் நக்கீரனை எழுப்பித்தருவோம். அறிவீர்களாக.

இறைவன் மீனாட்சி தர்க்கத்தரு

நன்ன நன்ன நானே நன்னா - நன்ன
நான நன்ன நானே நன்னா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சிதரு

மண்ணுக்கும் விண்ணுக்கு மிறையே யிந்த,
மானில மென்றும் வணங்கும் துரையே
நக்கீரனை நீங்க ளெரித்த அந்த,
காரணத்தை சொல்லுமையா.

இறைவன்தரு

கற்றுவிட்ட கருவத்தாலே அந்த
நக்கீரனும் புத்திகெட்டு
என்னை எதிர்த்து அவமதித்துமவன்
வேண்டாவாதம் செய்ததனனே

மீனாட்சிதரு

வேண்டாவாதம் செய்தவனை - நீங்கள்
நெற்றி கண்ணால் எரித்ததேனோ
புத்தி புகட்டியவனை இந்த
புவியில் வாழவைக் கேலாதோ?

இறைவன்தரு

இலக்கண முறையறி யாததாலே
வழு வழாநிலை தெரியாததால்
பிழை யெனது செய்யூலென்றே - அவன்
பிடிவாதம் செய் தனனே.

மீனாட்சிதரு

பொற்றாமரை வாவியில் விழுந்த - அந்த
நக்கீரனை எழுப்பி நீங்கள்
என்ன செய்வீர்க ளென்றதனை - எனக்கு
எடுத்தியம்பு வீர்களையா?

இறைவன்தரு

அகத்தியரை கொண்டு - நானும்
இலக்கணம் உரைக்க செய்து
மீண்டும் சங்கத் தலைவனாக - அவனை
மாற்றிடுவேன் மாமயிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன்தரு

அகத்தியருக் கிலக்கணத்தை - நன்கு
கற்பித்த நீங்களேனோ?
நக்கீரனுக்கு கற்பிக்க இப்போ - நீங்க
விரும்பாததேனோ சுவாமி.

மீனாட்சிதரு

நம்மிடத்தே பொறாமை கொண்டதனால்
அகத்தியனைக் கொண்டு நானும்
இலக்கண முரைக்கவைத்து - அவன்
தலக்கனத்தை குறைத்திடுவேன்.

இறைவன் வசனம்

நெற்றிக்கண் அக்கினியின் அகோரம் தாங்காது, வாவியில் வீழ்ந்து கிடக்கும் நக்கீரனே எழுந்து வருவீராக.

நக்கீரன்தரு

நன்னநன்ன நான நன்ன
நன்னநன்ன நான நன்ன
நானநன்ன நானநன்ன நானா

1. சோதியே சிவபரனே - இந்த
பாவியை மன்னித் தருள்வாயே.

2. பெரும் கருணைச் சிவனே - நானும்
பெரும்பிழை யறியாது செய்தேனே.

3. திருவுளம் கொண்டு சிவனே - என்னை
மறுபடியும் வாழவைத்தா யிறைவா.

நக்கீரன் வசனம்

பெரும் பிழை செய்த என்னை மன்னித்து பேறளித்த இறையே இறைவியே உங்கள் திருவருள் பேற்றினால், அகம் திருந்தி மகிழ்வுற்றேன் சுவாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் வசனம்

செய் பிழை உணர்ந்தாய், உமக்கு அகத்தியரைக் கொண்டு இலக்கணமுணர்த்தி வைப்பேன். செம்பகப் பாண்டியனிடம் சென்று, தருமிக்கே ஆயிரம் பொற்காசுகளை வழங்கி வைக்க வேண்டும்.

நக்கீரன் வசனம்

இப்பவே சென்று, அப்படியே வழங்க வைப்பேன் சிவனே!

சபைவணக்கம் (இன்னிசை)

இத்தனை நேரமாக இருந்துமே கூத்துப் பார்த்த
அத்தனை பேர்க்கும் நாங்க ளன்பதாய் வணக்கம்கூறி
உத்தமக் கலைகள்யாவும் உயிர் பெற்று வாழ்க வென்று
அத்தனைத் தொழுது போற்றி யன்புடன் விடை பெற்றோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி வாழ்த்து
தரு

நன்னன்ன நானன்ன நானன்ன நானன்ன
நானன்ன நானானா.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

தனனாதனனா தனதனனா - தன
தனனாதனனா தனதனனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களம் மங்களம் மங்களமே - சுப
மங்களம் மங்களம் மங்களமே

தில்லையாடி கூத்தனுக்கும்
தான்தோன்றீஸ்வர அப்பனுக்கும்
துங்கமுகமுடை கணபதிக்கும்
தூயவாரை நகரழகனுக்கும்
வெண்கமல மலர் வீற்றிருக்கும்
கல்விக்கரசு சரஸ்வதிக்கும்
மங்களம் மங்களம் மங்களமே - சுப
மங்களம் மங்களம் மங்களமே.

பாவது வடித்துக் கூத்தாக
பாடிய நற்றமிழ் புலவனுக்கும்
கூத்தில் பாத்திரம் ஏற்றோர்க்கும்
பார்த்து ரசித்துக் களித்தோர்க்கும்
ஆட்டம் பொறுத்த வன்னையெங்கள்
பூமாதேவித் தாயாருக்கும்

மங்களம் மங்களம் மங்களமே - சுப
மங்களம் மங்களம் மங்களமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராவண சொரூபம்"

தென்மோடி 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவண சொரூபம்

கூத்துப்பாத்திரங்கள்

இலங்காபுரிவேந்தன் - இராவணன்
இராவணணன மனைவி - மண்டோதரி
இராவணன் போர் வீரர்கள் - இருவர்
இராவணன் அரண்மனைக்கட்டியகாரன் - ஒருவன்
இராவணன் மகன் - இந்திரசித்து
சீதாபிராட்டிகணவன் - இராமர்

கதைச் சுருக்கம்

தென்னிலங்கையை ஆட்சி செய்த இலங்கேஸ்வரனாகிய இராவணன் சீதையை சிறையெடுத்து அசோக வனத்தில் சிறை வைத்ததால் அவர் கொடிய இராட்சத அரக்கனென்றும் அவருக்கு பெண்ணால் தான் அழிவென்றும் கூறியதற்கு சரியான விடைக்கான பலவழிகளில் பிழையான விடைகள் காணப்பட்ட வேளையில் தன் மனைவி மண்டோதரியும் இந் நினைவே கொண்டிருக்கலாம் என அறிந்த இராவணன் முதல் நாள் இராம, இராவண யுத்தத்தின் போது இன்றுபோய் நாளைவா என்றுரைத்தனுப்பியதும் தனது சுய சொரூபத்தை மனைவி மண்டோதரியிடம் காட்டுவதற்கு தான் வணங்கி வந்த கையிலைநாதன் தனக்களித்த சந்தர்ப்பம் என்பதையும் உணர்ந்து இரண்டாம் நாள் போருக்குச்செல்ல புறப்படும் சமயம் மங்கள திலகமுடன் வந்த மண்டோதரி கையிலிருந்த திலகமது நிலத்தில் சிந்த, விக்கித்து விறைத்து செய்வதறியாது செயலிழந்து நின்ற மண்டோதரியைக் கருணை கூர்ந்த பார்வையால் பார்த்த இராவணனின் செயலால் சுயவுணர்வு பெற்ற மண்டோதரி சிந்திய திலகமதை விரலால் தொட்டு இராவணன் நெற்றியில் திலகமிட்ட மனையாளாகிய திலகத்தை நோக்கி இராவணன் தனது இதயத்தை திறந்து மண்டோதரி மற்றவர்கள் கூறுவதுபோல் நீரும் என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டமானவனாக மனதில் வரித்திருந்தால் அது உண்மையல்ல உனது மனப்போராட்ட கேள்விகளுக்கு இப்போது விடை பகர்ந்து உமது சந்தேகத்தை போக்காவிட்டால் எனக்கு அதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும். அதனால் இப்பொழுது நான் கூறும் உள்ளத்து உண்மைகளை உண்ணிப்பாய் உற்றுக்கேட்டு உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். எனக்கு ஏற்பட்ட இந்த நிலை உடன் பிறந்தே கொல்லும் வியாதியாகியதற்கு எனது உடன் பிறப்புக்களாகிய சூர்ப்பனகையும் தம்பி விபுடனுமே காரணமாகும்.

தங்கை சூர்ப்பனகை கணவனின் சாவுக்கு சந்தர்ப்ப சூழ்நிலையால் நான் காரணமானதை மனதில் வரித்துவைத்து என்னை பழிவாங்க தருணம் பார்த்துக் கொண்டிருந்த சூர்ப்பனகை ஆரிய இராம, இலக்குமணனைக் கண்டதும் இவர்களே ஏற்றவர்கள் என எடைபோட்டுப்பார்க்க அவர்களை தகாதமுறையிலனுக மூக்கோடு, காதுகளும் அரியப்பட்ட நிலையில் திடம் கொண்டு என்னிடமனுகி சீதையின் அழகு கூறி அவளை சிறையெடுத்து தான்பட்ட அவமானம் போல் ஆரியரிருவரும் அவமானப் பட வேண்டு மென்று கூறியதும் சகோதரி பாசத்தால் கட்டுண்டு தட்டாது அவள் கோரிக்கையை நிறைவேற்ற சிறையெடுத்தேனே தவிர அவள் மேலாசை கொண்டு அல்ல, சீதைமேல் ஆசையிருந்தால் அவள் சுயம்பரத்திற்கு முன்பே அவளைக் கவர்ந்திருப்பேன். நான் சிவபக்தன், சிவ சின்னங்களை நேசிப்பவன் என்பதை நீ நன்கறிவாய். அந்த சுயம்பரத்தன்றே சிவசின்னமாகிய அந்த சிவதனுவைத் தரிசிக்க முடியும் என்பதனாலே சென்றேன். தரிசித்தேன் வந்தேன். எனக்கு பெண்ணால் அழிவென்பது உண்மையென உணர்கின்றேன். ஆனால் அது சீதையாலல்ல தங்கை சூர்ப்பனகையால் என்று புரிகின்றது மற்றும் எனது தம்பி விபுடனன் என்னைச் சரியாகப் புரியாது எனது பலம் அறிந்து பொருதவும் முடியாது. ஆட்சிக்காசை கொண்டு சந்தர்ப்பம் பார்த்திருந்தவன். ஆரியரிருவரிடமும் சரணடைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் காட்டிக் கொடுத்து மகன் இந்திரசித்தின் அழிவுக்கும் கால்கோலாகி, ஒற்றனாகி எமது குலத்தை அழித்துவிட்டான். எனவே எமது அழிவு உடன்பிறப்புக்களால் ஏற்பட்டது என்பதை நீ புரிந்துகொள் என்று தன் சொரூபமதைக் காட்டுகின்றான் இராவணன் தன் மனைவி மண்டோதரியிடம். உண்மைச் சொரூபம் உணர்ந்திட்ட மனையாள், உள்ளத்தெளிவடைந்து போருக்குச் செல்ல அனுமதி கொடுக்கிறாள். போரில் இறந்த இராவணனை கண்டு இராவண சொரூப உண்மை எடுத்தியம்பி அழுது வெளிப்படுத்துகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவண சொரூபம்
(தென்மோடி கூத்து)

ஈழமாம் இலங்காபுரி தன்னனை இட்டமோடரச தாண்ட
சூரனாம் இராவண சொரூபமதை துலங்கு நாடகமாகப்பாட
பாரதம் தன்னை வெண்கொம் பொடித் தெழுதியளித்த
வாரண முகவைங்கர வேழமுகவன் திருவடி காப்பதாமே.

மண்டலத்திலுள்ளோ ரெல்லாம் மாறுபாடாக கதைத்திட்டாலும்
மண்டோதரி மனைவியிடம் இராவணன் விஸ்வரூபம் தன்னை
விண்டுமே உரைத்த காதை நாடகமாய் பாடியாட
வெண்டாமரை வீற்றிருக்கும் வாணியென் நாவில் வந்தருளே.

விநாயகர் காப்பு

தந்திமாமுகனே போற்றி செந்திரு விநாயகா போற்றி
வந்திடு வினைகள் தன்னை நொந்தோடச் செய்வாய் போற்றி
கந்தனுக்குக் கானகவள்ளியை அளித்தாய் போற்றி
கல்வியும் ஞானமுமாகி நாவில் வந்தமர் கரிமுகனேபோற்றி.

கட்டியகாரன் வரவு
சபைவிருத்தம்

சீரோங்கு தென்னிலங்கை நகர் செங்கோலோச்சும் புகலோங்கு
-மன்னனான
பேரோங்கு இராவணராசன் பெருமையை சொல்லும் தீரன்
தாரோங்கு மாகதர்போற்று தார்கோதை மண்டோதரி பணிகள்
-கொள்ளும்
பார்போற்று கட்டியகாரன் சபைதனில் தோற்றினானே.

சபைத்தரு

தனனத் தானின தான தான தானின
தனனத் தானின தான தான தானின - தானின தானா

1. வாரணம் பொருத மார்பன் வரையினை எடுத்த
தோளான்
காரண வரன்மனை கட்டியன் தோற்றினானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சாமகானம் பாடிசங்கரன் வாள்பெற்றவன்
மாமலை எடுத்த வாசல்கட்டியன் தோற்றினான்.

3. மண்ணவரும் விண்ணவரும் வந்து நின்று பணிந்திடு
மன்னன் இராவனேஸ்வரன் கட்டியன் தோற்றினானே.

கட்டியகாரன்தரு

நன்னன்ன நானன்ன நானன்னா - நன்ன
நானன்ன நானன்ன நானன்னா

1. கனக மணிமகுட மன்னவன் - நாட்டை
காவல்செய் இராவண பூபாலன்
மான்புறு பாரி மண்டோதரி - போரின்
மாற்றம் அறிந்திட வருகிறா(ள்)

2. சொர்க்க புரியா யிருந்திட்ட - இலங்கை
சோக புரியாக மாறியதாலே
போரை நினைந்து வேதனையோடு - இறை
நாம மோதி யரன்மனை மேவினா(ள்)

3. ஆவது மழிவதும் பெண்ணாலே - என்று
ஆறாத்துயர் கொண்டுலாவியே
இன்றைய போரிலா ரிறப்பாரோ என்று
எண்ணி ஏக்கமுடன் தவிக்கிறா(ள்)

கட்டியகாரன் வசனம்

இராம இராவணன் யுத்தம் நடைபெறுவதால், பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிந்து விட்டன. இன்றைய யுத்தத்தில் யார் படுவாரோ? என்ற ஏக்கமுடன் இலங்கேஸ்வரன் தேவி அரன்மனை வாறா, நானோ போர்கள நிலமை அறியப் போகின்றேன். இந்த சோக சூழ்நிலையிலே யாரும் பேசக் கூடாது. பேசினால் குற்ற தண்டமாகும். சமூகம் எச்சரிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோதரி வரவு

சபைவிருத்தம்

வளம்மிகு இலங்காபுரி கீர்த்தி யோங்க
வண்ண மணிக் கொலுவிருந் தாட்சிசெய்யும் -
பவளவிதழ் பளிச்சென்று விளங்கும்
புவனமது புதுமைகண்டு வியக்கும் -
கவள முளை கனத்தழகு கவர்ச்சியாக
நவமணி மாலைகள் மார்பில் விளங்க -
துலங்கு இராவணன் அரசியாகவே
விளங்கு மண்டோதரி கொலுவந்தாளே.

சபைத்தரு

தனனத் தனதன தனனத் தனதன
தனனத் தனதன தானினா - தன
தனனத் தனதன தனனத் தனதன
தனனத் தனதன தானினா - தன

1. கதிரொத் திலங்கிடு கமலத்திருமுகம் கலங்கியே
நலுங்கி வாடவே – நிறை
கட்டமைப்பான கட்டுடம்பானது கவலையாலது
மெத்த நோகவே
பதிநாளும் புகழ்ந்திடு பவளவாயிதழ் வெளுத்து
சோகமதாகவே அச்ச
மதிகமாகி விழிகள் கலங்கிட மண்டோதரி
தோற்றினாள்.

2. மதியுற்றிடு மன்னனை சதிவந்துற்றதாலே சங்கடம்
வந்து நின்று கலங்கியே – மிக
விதியுற்றதால் துன்பசாகர மகப்பட்ட துரும்பாக
மனம் குழம்பி கலங்கியே – ஒன்றி
ரதிபதியாக யிருந்திட்ட வாழ்விலே இடிவந்து
விழுந்ததோ வென ஏங்கித்தவித்துமே
அதிவிரைவாய் யுத்தசேதி யறிந்திட்ட
மண்டோதரியரன் மனைவந்து தோற்றினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோதரி கொச்சகம்

ஆதியே! சோதியே! அழிவில்லா ஐயனே! மெய்ப்பொருளே!
மூலமுதலான! முடிவில்லாத் தனிப்பொருளே!
எந்த வினைப்பயனால் இந்தவினை மூண்டதுவோ?

தரு

தனதான தனதான தனதான தனதான - தானினா
தனதான தனதான தனதான தனதான - தானினா

1. எல்லையில்லா துன்பம் அள்ளி அளிக்கும்
-ஆண்டவரே இங்கே
முந்தை செய்வினையால் மூண்டதோ பழிஈசனே

2. நொந்து வெந்து போரில் மாண்ட பேர்கள்
-அனேகமே இன்னு
மின்றையப் போர்தனில் யார்யார் மாழ்வாரோ?
-அறியனே

3. வேசமது கொண்ட சகோதர பாசத்தாலே எமை
-வந்து வினை
மூண்டதோ நாடு சுடுகாடாய் இருண்டதோ
-இறைவனே

4. தேசத்து வித்தான வீழம் சிதைவுற்று போனதே ஈசா
நேசமோ டெமைக் காக்க நீதானே நேரினில்
-வாருமே

மண்டோதரி வசனம்

இன்றையப் போரில் யார் பிழைப்பாரோ? யார் இறப்பாரோ? ஈசனே! நீங்கள் தான் எமைக் காக்க வேண்டும் நேசனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரசித்து வரவு

சபை விருத்தம்

போர்க்களத்திடை பொருதிய கும்பகர்ணன் மாண்டிட்ட
-செய்தியறிந்தே
பார்கடல் பஞ்சி போல் நெஞ்சம தஞ்சி சஞ்சல முற்றிட
கார் இருள் சூழ்ந்து கவலையுற்றிடு தாய் மண்டோதரியிடம்
-சேதியுரைத்திட
ஊர்ந்திடு தேர்விட்டு இந்திரசித்து அரண்மனை தோற்றினானே.

சபைத்தரு

தனதத்தன தான தனதத்தன தான தனதத்தன தான தானினா

1. சஞ்சலம் கொண்டிடு நெஞ்சமது விஞ்ச அஞ்சவே
வெஞ்சமர் தன்னிலே அஞ்சாது போரிட்ட சிங்கத்தை
வஞ்சகத்தால் கொன்றிட்ட சித்தப்பன் சேதிசொல்லவே

2. இந்திரனோ டியமனையு மெதிர்த்தன்று சத்துருக்கனின்
தலைக்கன கொழுப்பை கரைத்தவன்
வித்தார தேவதானவர் கொட்டத்தை யடக்கியவர்
பட்ட செய்தி சொல்லவே

இந்திரசித்து (பல்லவித்தரு)

1. ஓடிச்செல்வேனே விரைவாக ஓடிச்செல்வேனே
ஓடிச்செல்வேனே அரன்மனை நாடிச்செல்வேன் - நான்
ஆடு போர்களம் விட்டு அன்னை தனைத்தேடி
வாடிமனமது கோடி வேதனை கொள்ள
(ஓடிச்...)

2. பத்து நாமம் கொண்ட ராவணன் சகோதரன்
அச்சமென்பது அறியாத மாவீரன்
சித்தம் கொண்டண்ணர்க்காய் போர்க் களம் தன்னிலே
செத்திட்ட செய்தி சொல்ல மிகவிரைவாகவே
(ஓடிச்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விண்ணோர் மண்ணோராவர் வீரம் கண்டஞ்சிவர்
எண்ணியபடியே இச்சை போல் வாழ்ந்தவர்
மண்ணின் மீதின்று வீழ்ந்து மாண்ட செய்தி
அன்னையிட மறைய இந்திரசித்து நானே
(ஓடிச்...)

4. இச்செகம் நடுங்கிடு இராவணன் தம்பியவன்
இந்திரன் வச்சிராயுத வலு குறைத்தவன்
இன்ப துன்பமதில் எம்மோடு நேர் நின்றோன்
சென்று விட்ட செய்தி உரைக்க வந்தேனே
(ஓடிச்...)

இந்திரசித்து வசனம்

சித்தப்பா போர்க் களத்தில் பட்டுவிட்ட செய்தியை அரன் மனையில் அல்லலுற்றிருக்கும் அன்னையிடம் எடுத்துச் சொல்ல ஓடியே செல்கின்றேன்.

இந்திரசித்து மண்டோதரி தரு
தரு

நன்ன நன்ன நானனன்ன நானா - நன்ன
நானனன்ன நானனன்ன நானா

இந்திரசித்து தரு

இன்னமுதே அன்னையரே வாரும் - நானும்
இயம்பும் மொழி தன்னையே நீர் கேளும்.

மண்டோதரி தரு

மேன்மையுறு சிறிய தந்தை தானும் - அங்கே
மேகநாதா மீண்டாரா நீ கூறும்.

இந்திரசித்து தரு

வீரமுடன் போர் புரிந்த வீரர் - அவர்
வீர சொர்க்கம் அடைந்தாரே தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோதரி தரு

என்ன சொன்னாய் என் மகனே - நீயும்
எங்கள் மாமேரு மறைந்ததோ சிவனே.

இந்திரசித்து தரு

மறையவில்லை மறைத்தானே அம்மா - ஏதும்
மறியாத உடன் பிறப்பை சும்மா.

மண்டோதரி தரு

சூது செய்த சுயநலக்காரன் - அவரை
சூழ்ச்சியினால் வென்று விட்டானோ?

இந்திரசித்து தரு

உடன் பிறந்த விபுடனன் தானே - அங்கே
உண்மை கூற்றுவனாய்ப் போர்க்களத்தே நின்றான்.

மண்டோதரி வசனம்

உன் சிற்றப்பனா கூற்றுவன் ஆனான் - அவன்
உடன் பிறப்பென்று அறியலையோ பாவி

இந்திரசித்து தரு

சிற்றப்பன் என்று சொல்ல மாட்டேன் - பொல்லா
சிற்றறிவால் ஒற்றப்பனான வரை.

மண்டோதரி வசனம்

வந்தவன் கொல்ல வில்லையா மகனே - நாம்
வளர்த்தவனே கொன்றானடா குகனே.

இந்திரசித்து (இன்னிசை)

குலம் காத்து தன்மானம் காத்த கோமகனுக்கு கூற்றுவனாய்
குலம் கொண்ட சுற்றம் சூழல் தமயனையும் மறந்து
கண்டவன் கடவுளாக கடுகளவும் நன்றியில்லா நய
வஞ்சகத்தால் கொலையுண்டார் கும்பகர்ண னம்மாவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரசித்து வசனம்

இன்றளவும் தனை வளர்த்து ஆளாக்கி, தரணியில் தலை நிமிர்ந்து வாழவைத்த வழி மறந்து, நய வஞ்சகத்தால் நம்மைக் கொன்றான். இந்த காட்டிக் கொடுத்த ஒற்றப்பன் இல்லையாயின் நமக்கு இழப்புமில்லை, இறப்புமில்லையம்மா.

மண்டோதரி ஆசிரிய விருத்தம்

வஞ்சக நெஞ்ச விபுடனா அண்ணனின் செயல் கண்டஞ்சினாயே
கெஞ்சியே செஞ்சது பிழையென்று கூறியுமவர் குணம் கண்டு கொஞ்சினாயே
நஞ்சிலும் கொடிய சிந்தையாலுன் னுயிர்மேல் ஆசை கொண்டு மிஞ்சினாயே
வஞ்சனையா லுன்குலமளிக்க வந்தவ ரென்றறிந்து மவர்களோடு தஞ்சினாயே
உண்ணண்னன் கும்பகர்ணன் மூத்தோன் செயலது பிழையேயெனப் பார்த்தாரே
தன்முடிவையவர் மாற்றார் தான்போரில் குதிப்பதே சரியெனவவர் போந்தாரே
அண்ணன் குலம் சொந்த பந்தங்களுக்காகவே தன்னுயிரை மாய்த்தாரே
உன்னுயிர்காக்க உன்ணன்னனைப் பழித்தாயே உன் செயலல்லவா கொடியதே.

மண்டோதரி வசனம்

ஒற்றனாகி வேவு பார்த்து, எம் குலமழிய வழிவகுத்தாய், உன் குடி நாம் கெடுத்தோமா? உன் மூத்தோனைப் பழித்தாய், ஆனால், உன் செயலே மிகக் கொடியதடா விபுடனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரசித்து (பல்வலித்தரு)

சொல்லுவேன் கேளும் அம்மா நானும் சொல்லுவேன் கேளும்
சொல்லுவேன் கேளும் தந்தை பெருமைகளை சொல்லுவேன கேளும்
சொல்லாதே பொல்லாப்பு தந்தை மீதினிலே நல்லவர் என்பதை நாடறியத்தானே

(சொல்லுவேன...)

1. தந்தையை அறியாயோ? பெருமையை உணராயோ?
எண்ணிய கருமத்தை ஆனே
ஆயிரம் வேதப் பொருள் கற்றறிந்தவர்
ஆதிசிவனுக்கு அருகான மித்திரன் குபெரனின்
மூத்தோன் என்பதை நானும்.

(சொல்லுவேன...)

2. வேதாப்பியாச வித்தைகள் கற்றவர்
ஆசாரங்களை நடத்தியே காட்டுபவர்
தந்தை யருமை பெருமை யிந்த வாரியரறியாரே
தசரத வாரியன் பலதாரம் கட்டலாம்
தந்தை திராவிடன் கட்டினாலே பாவமாம் தாயே.

(சொல்லுவேன்...)

3. மண்ணவன் சீதையை பிடித்தது காமமாம்
விண்ணவர் பெண்களை தீண்டினால் உத்தமம்
விந்தையான வெறும் வேடிக்கை இதுவல்லோ
அந்தவர்க்கு விபுடணன் சொந்தமதாயினானே
தந்தை திரிகாலஞானி தரிசனம் காண்பாயே.

(சொல்லுவேன்...)

இந்திரசித்வசனம்

மதிகெட்ட ஒற்றப்பன் விபுடனன், தர்மம் என்றபோர் வையில் நம்மையின்று தறிக்கலாம். ஆனால், அவனொரு நாள் தனிமையில் தறிக்கத்தான் படுவானம்மா! என்னை இன்னிலைக்கு உயர்த்திய தந்தைக்கு செய்ய வேண்டிய கடமை, நாளை நானே போர் நடத்துவேன் வெற்றியில்லையேல் வீரமரணம். இன்றே விடைதாருமம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோதரி வசனம்

நம்குலப் பெருமை காக்கசென்று, வென்றுவா மகனே.

இராவணன் வரவு

சபை விருத்தம்

வீரிய தவம் செய்து சிவனிட மிருந்துமே
முக்கோடி வாழ் நாளோடே
வீரவாள் பெற்றவன் வரையினை எடுத்தவன்
வீரத் தோள்களுடைய தீரன்
அரிய தம்குடிகளைக் குறைவின்றிக் காத்துமே
குலம் காத்த கர்மவீரன்
அரிவையாள் மண்டோதரி மனம் நிறைந்தவன்
வீணைக் கொடி வித்தகன்
வீராதி வீரதிராவிட தீர தலைவனாம்
கொள்கையில் குணக் குன்றனாம்
ஆராத துயரோடு மனையோடுரையாட
இராவணன் அரன்மனை வருகின்றாரே.

சபைத்தரு

தனதந்த தானின தானினா....
தனதந்த தானின தானினா....

1. மதியிலங்கு இராவணன் மனதினில்
சதிசெய்திடு சகோதரர் சூழ்ச்சியால்
விதியிது தானா வென்றெண்ணியே
கதிகலங்கி இராவணர் தோற்றினார்.

2. அட்டமா சித்திகளைப் பெற்றவர்
துட்டர்கள் கொட்டம் குறைத்தவர்
அட்டதிக்கும் புகழ் பூத்தவர்
கட்டுடல் இராவணர் தோற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன்தரு

நன்னன்ன நானநன்னா நானாநன்ன நானன்ன நானனன்னா
நன்னன்ன நானநன்னா நானாநன்ன நானன்ன நானா

1. மங்களத்திலகம் சிந்த மனம்வெந்து துடித்தாயே
   மாதரசே
   சிந்திய திலகம் தொட்டு கரம் நடுங்கிடப்
   பொட்டுமிட்டாய்

2. நெஞ்சம் தடுமாறி மெத்த சஞ்சலம் கொண்டு நானும்
   வஞ்சியேமாமயிலே சொல்லும் வார்த்தை
   சிந்தையோடுகேளும்.

3. அன்னமே மின்னாளே யழகுமண்டோதரியே நீயும்
   இன்னால் வரைக்குமுன் இதயத்தில் பூட்டியே
   வைத்திருந்த

4. எல்லோர்க்கு மேற்பட்ட சந்தேகம் மேற்பட்டு
   விடமுன்னே
   வன்னமடக் கொடியே உன்முன் பகர்ந்திட ஓடிவந்தேன்

5. சீதை தன்னை நானும் சிறையெடுத்து
   வைத்திருப்பதனாலே
   வாதையுன் மனதை நாளும் வாட்டிவதைப்பதாலே

6. இந்திர சித்தனழிவும் தங்கை சூர்ப்பனகை
   சூழ்ச்சியதுவும்
   வந்திட்ட பதவிமோகம் விபுடனன் சிந்தையை
   தூண்டியதே.

7. இன்றுபோய் நாளைவா என்றென்னை
   இராமனனுப்பியது
   விந்தையுலகமதை வேறுபட்ட வார்த்தையால்
   பேசிடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உன்தனற்கு சொந்த சொரூபம் காட்டிடவைப்பதற்கு
அன்போடு பரமசிவன் தந்திட்ட சந்தர்ப்பம் தானதுவே.

இராவணன் வசனம்

மண்டோதரி! உன்உள்ளம் உண்மை உணரும்படி இராவண தரிசனம் தருவேன், என்னையின்று பரிபூரணமாகப் புரிந்து கொள், என் இந்த சொரூபம் காண வேறு சந்தர்ப்பம் கிடைக்காது. சரியாக மனதில் பதித்துக் கொள்வாயாக.

இராவணன். மண்டோதரி (கொச்சகத்தரு)

மண்டோதரி கொச்சகம்

அலைகடல் ஓய்ந்தது போல லகம் அமைதியதாய்
நிலையான உங்கள் பேச்சினா லின்பமுற்று
தலைவா உங்களோடு மனம் விட்டுப்பேசுதற்கு,

தரு

திரிகூட பர்வதரே தேவர் போற்றுந் தேவதேவே
அரிவையாள் கூறும்மொழி பரிவோடு கேளுமையா
தரிசித்த நாளிருந்து இன்றுவேறு தரிசனம் காட்டுகின்றீர்
உரிமையோடு கண்டு உண்மையை நான் அறிய உன்
சொருபம் தனைக்காட்டும்.

இராவணன்கொச்சகம்

என்உள்ளக் கருவறையில் ஒளிந்து கிடக்கும் எந்தன்
பல்விசயங்களை வெளிச்சமிட காட்டுகிறேன்
சந்தேக தீச்சுவாலையிலே நன்றாக கண்டிடுவீர்.

தரு

மனம்நிறை மண்டோதரியே விண்டுரை செய்குவேன்
நீர்கேளாய்
மனப்பாரமது குறைந்து அகம் வெறுமை யானதடி
மனம் திறந்து காட்டப் போறேன் நீயும் அதை சரியாக
கேட்டிடுவாய்
உன்னுடன் வைத்துக்கொள் மனதில் தைத்துக்கொள்
உலகமோர் நாளதை உணரட்டும் பெண்ணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோதரி கொச்சகம்

பெண்ணால் தானழிவென்று தெரிந்து கொண்டும்
பெண்ணான சீதையை விடாது சிறைவைத்திருந்தால்
இன்னுமழிவுதான் மென்மேலும் வந்து சேர்ந்திடுமே.

தரு

ஆவதும் பெண்ணாலே கண்ணவனே அழிவதும்
பெண்ணாலே
பாவமதாகும் முன்னே என்னவரே ஆவதைப்பாருமையா
மீதியாயிருக்கு மிலங்கையது சோதியாய் துலங்க
வேணும்
வாதிட்டு வாழ்வது வாழ்க்கையதாகுமோ நீதியதை நீயே
யோதுமே துரையே.

இராவணன்கொச்சகம்

அந்தப் பெண்ணால் எந்தனக்கு அழிவென்றால்
அப்போதே அவளை தொட்டிருக்க மாட்டேன் நான்
விட்டாலு மென்னை விடாள் என் தங்கை சூர்ப்பனகை.க

தரு

நீதிமுறை தெரிந்த தேவியாளே நீயிதைக் கேட்டிடுவாய்
பாதியுண்ட தேரையை பாம்பு துப்புவதாலது தப்பாதே
உடன் பிறப்புக்களால் வந்த வேதனை இந்தச்சோதனை
உள்ளிருந்து கொல்வியாதி என் தம்பி தங்கையாலே
நான் பாவியானேனே.

மண்டோதரி வசனம்

உடன் பிறப்புக்களால் வந்தவினை என்றும், உள்ளிருந்தே கொல்லும் வியாதியென்றும் கூறுகிறீர்கள், தெளிவாக புரியும் படி கூறுங்கள் பிரவே.

இராவணன்கொச்சகம்

கூறுகிறேன் கேளும். என் சுய சொரூபமதை நன்றாக நேரிலே பாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொரு நாள் சூர்ப்பனகை கணவனை விதிவசத்தால்
கொன்றதனை மனதில் வைத்து வஞ்சம் வளர்த்த அவள்
முன்னின்று எதிர்க்க முடியாது போனதனால்
சந்தர்ப்பம் பார்த்துப் பயன் கொண்டால் சீதைதனை
எனக்கு அவகீர்த்தி ஏற்படுத்தி அதன்பின்னே
எனக்கழிவை உண்டாக்க வெண்ணி வனத்திடை வந்த
ஆரிய சோதரர்கள் ஏற்றவர்கள் தானாவென்று
ஆராய்ந்து திடசித்த மறிய முனைந்து மூக்கறுபட்டாள்
திக்கெட்டும் புகழ் கொண்ட ராவணன் சகோதரி
அன்னியயாரியரா லவமான முற்ற செய்தியதை
இலங்காபுரிதனிலே எட்டுதிக்கும் பரவதன்
நலங்கருதி யனுதாபம் பெற்று என்னிடம் வந்தாள்
உணர்ச்சிப் பெருக்கால் சகோதர பாசத்தால்
உளம் நெகிழ்ந்து வெஞ்சினம் கொண்டெழுந்தேன்
தந்திரக்காரி தான்பட்ட அவமானம் போல்
அந்தசீதையுமுற வேண்டுமென் றென்னிடம் வேண்டி
நின்றாள்
அதுகண்டந்த ஆரியர்கள் அவமானமுற வேண்டும்
அதனாலவளை சிறையெடுத்தால் போதுமென்றதன்பின்
சீதையழகைப் புகழ்ந்தவள்மீது நானாசை கொள்ள
செயற்பட்டாள்
சீதைமேலாசை நான் சிந்தைதனில் கொள்ளாது
ஆரியர்கள் சீதையை பிரிந்தவதியுற வேண்டுமென்றும்
சூர்ப்பனகை கணவனை நான் கொன்றேனென்ற
நீறுபூத்த நெருப்பாயென் மீதிருக்கும் வெறுப்பை
தணிக்க
பேராவலால் செயற்பட்டின்று பழிப்பட்டேன்
வாலிப முறுக்கால் இளவயதில் தெரியாது
செய்தவறுகளை
மீண்டுமின்று செய்வேனென்பது நியதியல்ல
கயமை சீதைமேல் நான் விரும்பி வைத்திருந்தால்
சுயம்பரத்தில் தனுசை வளைக்குமுன் கவர்ந்திருப்பேன்
ஐம்பத்து ஆறு தேசத்து அரசர்களும்
இச்சையோடே சீதை சுயம்பரத்துக்கு வந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத்தவிர நானோர் சிவபக்தனானதினால்
சிவதனுசை யொருமுறையேனும் தரிசிக்க
வேண்டுமென்று
சிவசின்னங்களை நேசிப்பவன் பூசிப்பனாதலினால்
மதிப்பளித்து தரிசித்து மனமகிழ்வோடு வந்தேன்
தங்கையின் பாசத்தால் நான் பாவியானேன்
தம்பியின் மோசவேசத்தாலாவி போனேன்.

மண்டோதரி வசனம்

சுவாமி, ஆங்காங்கே எனக்கெழுந்த சந்தேக முணர்ந்து, பாங்காகப் பதில் கூறி மனச்சலனம் தீர்த்திதீர்கள், இளயோனாலேற்பட்ட இடரை எடுத்துரைப்பீர்.

இராவணன். மண்டோதரி தரு

நனன நன்ன நானே நன்னா - நன்ன
நானனன்ன நானே நன்னா

மண்டோதரி தரு

பணிவே னுங்க திருவடியை - என்மேல் பட்சம் மிகுந்த உத்தமரே
அறிந்திடச் சொல்லிடுவீர் - உங்கதம்பி என்னசெய்தான் ஐயா.

இராவணன் தரு

நான் செய்தது தவறு என்ற - ஒருகாரணத்திற்காக பிரிந்து
ஆரியரிடம் சரணடைந்து - நம் ரகசியத்தை சொல்லி விட்டான்

மண்டோதரி தரு

ரகசியம் அறிந்து தானா - அவர்கள் இந்திரசித்தையும் கொன்று விட்டார்
அகமதி லிரக்கமின்றி - அந்த ஆரியன் வேறென்ன சொன்னானையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன்தரு

தம்பிக்கு பட்டங்கட்டி - என்னைக் குற்றேவலனுக்கு செய்யுமென்றான்

என்தனை காட்டிக் கொடுத்தான் - விபுடனன் ஆட்சிக்கு ஆசைப்-பட்டுமேதான்.

மண்டோதரி தரு

திரிச்சடையை யிங்குவிட்டு - சென்றது உளவறிந்து கூறத்தானே?

அறியாத யிவ்வுலகம் - உங்கள் மேல் வீண்பழி சொல்லுமையா

இராவணன்தரு

சூர்ப்பணகை சொல்கேட்கா விட்டால் - இந்த ஊரிரண்டு பட்டிருக்கும்

வஞ்சத்தால் மடிவதை விட - நான் வெஞ்சமரிலே மாழ்வது மேல்

மண்டோதரி வசனம்

தங்கள் உடன் பிறப்புக்களே தங்களுக்கு கூற்றுவர்கள் என்பதனை இதுவரை காலமும் நான் உணராமல் இருந்து விட்டேனையா. உங்கள் உண்மைச் சொரூபத்தை தரிசித்ததனால் என் கலக்கம் மறைந்தது, உள்ளம் தெளிவடைந்தது சுவாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் வசனம்

இந்த இராவணன் இறக்கலாம். இவ்வுலகத்தில் இறைவன் இருக்கும் இடமெல்லாம் இந்த இராவணனும் இருந்தே தீருவான். சிவன் மேனித் திருநீறு இருக்கும் வரை என் நாமமும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். இந்த உடல் மறையலாம், இராவணன் புகழ் மறையாது. போரில் நான் இறந்து விட்டால், எனது சொரூபமறிந்த நீ, போற்றுவார் போற்றட்டும், புளுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும். தாரணியறிய இந்த உண்மைதனை கூறுவாயாக.

போர்வீரன் வசனம்
சபைவிருத்தம்

நவினுறு மார்புக்கவசம் துலங்கவே பூட்டி மிகப்
பவித்திரமாக வாளைப் பம்பரம் போல் சுழற்றி
தவித்துமே எதிரியெல்லாம் தாவியே வெகின்டோட
கவினுறு ராவனேச சேனைப் போர்வீரர் தோற்றினானே.

சபைத்தரு

தந்தன்ன தந்தனத் தானா - தன
தந்தன்ன தந்தனத் தானா
தந்தன்ன தந்தனத் தானா - தன
தந்தன்ன தந்தனத் தானா

1. சுந்தரப் புஜத் தோளான் - நல்ல
மந்திர தந்திர வேளான்
செங்கையில் வாளேந்தியே - படைப்
போர் வீரரும் வந்தனரே.

2. களநிலவரம் அறிந்திட - கவலை
கனத்திட எதிர்பார்த்திடு
இலங்கை வேந்தனரன்மனை - போர்
வீரரும் வந்து தோற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இராவணன் திருவடி தேடியே - மிகு
வேக நடையுடன் கூடியே
சோகமதால் முகம் வாடியே - ஓடி
போர் வீரரும் வந்து தோற்றினார்.

போர்வீரன் கவி

இன்னில மெலாமொரு குடைநிழற்கீழ்
இருந்தர சாளு மிறையே
விண்ணவரஞ்சு பொன்முடி புனைந்த
இராசனே திருவடி போற்றி.

என்ன தவக்குறையோ வேனிந்த சோதனையோ
என்ன வென்றுரை செய்குவேன் நாம்
மண்ணாளப் பிறந்த மகனிந்திரசித்தை
வன்மையுடன் கொன்று விட்டனரே போர்க்களத்தில்

போர்வீரன் வசனம்

கேளுங்களையா இராவண ராசனே! போர்க்களத்தில் இளவல் இந்திரசித்தை வஞ்சனையால் கொன்று விட்டார்கள் துரையே!

இராவணன்தரு

நன்ன நன்ன நானே நன்ன நானா - நன்ன
நானன நானன நானன நானன
நான நன்ன நானே நன்ன நானா

1. ஐயையோ! என்மகனே மேக - நாதா
அழுதழு துருகியே விழவிழ எனதுடல்
ஆவி விட்டுப் போகுதடா மகனே.

2. நீயுமென்னை கைவிட்டாயோ மகனே - எந்தன்
உடலது நடுங்குது தலையது சுழலுது
ஒப்பில்லாத மரகதமே மகனே.

3. இந்திரனைப் போரில் வென்ற மகனே - என்னுடைய
வீரனே தீரனே சூரனே யுனையினி
எப்பொழுது காண்பேனடா மகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உன்கைப் பாணங்களாலே மகனே - மிகப்
பொல்லாத துட்டரை நில்லாது பேர்த்திடு
வீரசிகாமணியே மேகநாதா

5. மதம் பிடித்த யானையுடன் மகனே - பொருதி
மத்தகம் பிளந்திட மார்பினில் தைத்ததும்
எந்தனற்கு நொந்த தில்லை மகனே.

6. கைலமலை தூக்கும் போது மகனே - அன்று
மலங்காத கலங்காத மனமதின்று
உன்மெய் தூக்க வஞ்சுதே மகனே.

7. எனக்கு கிரிகை செய்வாயென்று மகனே - இருக்க
முந்து வினையது வந்து உந்திய தாலோ
உனக்கு கிரிகை செய்ய வைத்தான் மகனே.

இராவணன் வசனம்

வீரனே! எனது மகன் கையில் வாளும், அவன் தேர் மேலும் இருக்கும் வரை, அவனை யாரும் வெல்லவோ கொல்லவோ முடியாது. எப்படியடா இது நடந்தது.

போர்வீரன் வசனம்

சொல்லத் தயக்கமாகவே இருக்கிரதரசே. உங்கள் இளையோன் அங்கிருக்கும் வரை யாரையும் வெல்லவும் முடியாது, கொல்லவும் முடியாதரசே.

இராவணன் (சினத்துடன்)

என்ன சொல்லுகிறாய் வீரா? எதனையும் ஒளியாது உண்மையை உரைப்பாயாக.

இராவணன். வீரன்தரு

தானா தன தந்தன்ன தந்தன்ன தந்தனத் தானானா

போர்வீரன்தரு

தங்கள் குலத்து ரகசியங்க ளறிந்திட்ட விபுடனனே - அரசே
இந்திரசித்தோடின் நாட்டினழிவிற்க்கும் காரணமானானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன்தரு

உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்திட்ட பாவிதனை நானும் - அப்போ
கண்ட துண்டமாக வெட்டியிருந்தா கவலை யின்றில்லையே

போர்வீரன்தரு

வண்டுரு கொண்டு வந்திங்கே சுற்றிப் பார்த்துமே சென்று - அவனும்
இந்திரசித்து செய் நிகும்பலையாகத்தை அழிக்க வழிசமைத்தான்

இராவணன்தரு

யானையைப் பிடிக்க யானையையே பயன் கொள்வது போலே -என்றும்
ராவண தேசமழிக்க நீயே பயனானாய் பாதகனே

போர்வீரன்தரு

இந்திர சித்தின் பிரமா வஸ்தீரத்தா லனைவரும் மூர்ச்சிக்கவே - மெய்யாக
சஞ்சீவி மூலிகை கொண்டு வரவைத் துயிர் மீட்டவனுமவனே

இராவணன்தரு

இன்னு மென்னவென்ன சூழ்ச்சிகள் செய்தானோ வெங்க குலமழிந்திடவே அவனும்
உண்மையை ஒழியாமல் உள்ளபடியதை ஓதிடுவீரெனக்கு.

போர்வீரன்தரு

தங்கள் கீர்த்தி வீரம் தவவலிமை பெற்ற வரங்கள் கண்டுமே - அவன்
கொண்ட பொறாமையால் பழிமுடிக்க வாரியரை துணை கொண்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன்தரு

கொண்ட துணையாலே சண்டாளப்பாதகன் தாங்காத் துயரிழைக்கானஅவனை
அன்றவனை நானே கொன்றிருந்தாலிந்த அநியாயம் வந்திருக்கா

போர்வீரன்தரு

இந்தப் போர் ராவண விபுடன் போரென்றே நம் வீரர்கள் பேசிகின்றார் அரசே
அண்ணன் தம்பி பழிக்கு நாமேன் மாழவேணும் என்றும் கதைக்கிக்கிறாரே

போர்வீரன் (இன்னிசை)

அயலவன் மனைவியை அண்ணனவன் கவர்ந்தால்
அவளைக் கொண்டவனுக்கில்லா வார்வ மிவனுக்கேன்
உங்கள் பின்மகன் முடிசூட விருந்ததை விரும்பாது
தப்பிதமாய் பகைவருடன் சேர்ந்து கொல்ல வழிவகுத்தான்.

போர்வீரன் வசனம்

கேளு மரசே! இந்தப் போர் சீதையின் பொருட்டல்ல, அண்ணன் பிழை செய்தால் ஒதுங்கியிருப்பதை விட்டு, பகைவருடன் சேர்ந்து, அரசனாகுமாசையால், விபுடனன் செய்யும் சூழ்ச்சியில் நாம் ஏன் வீணாக இறக்க வேண்டுமென்ற சந்தேகம் போர் வீரர்கள் மத்தியிலும் இருக்கின்றது. அறிவீர் அரசே.

இராவணன் வசனம்

உடன் பிறந்தே கொல்லும் வியாதியாகி விட்டான் விபுடணன். எனக்குப் பகைவன் யாருமல்ல அவன்தான். உண்மையாகவே இராவண விபுடன யுத்தமேதான். விபுடனா! முதலில் உன்னை மாய்ப்பேன்! பின்னே மற்றையோரைச் சாய்ப்பேன்! என் தலைமையில் நாளை போருக்குப் படைகள் தயாராகட்டும் வீரர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமர்வரவு

சபை விருத்தம்

பெருமைகொள் இலங்காபுரி இராவணனோடு பொருத
கருணை கூர்ந்தின்று சென்று நாளைவாவென்று கூறி
பொருது போர்க் கருவியோடின்று போர்முரசதிர
திருமேனி இராமபிரான் போர்க்களம் புகுகின்றாரே.

சபைத்தரு

தனனத்தான தான தனனத் தானதான
தனனத்தான தான தானினா

1. அமரர் தினமேற்ற அசுரர் மனம் தூற்ற - இராமர்
அமர் செய்ய போர்க்களம் வருகின்றார்.

2. கையில் வில்லம் போடு கனத்த சினத்துடனே
கடுகியே போரிட போர்க்களம் வருகின்றார்.

3. துய்ய படைகண்டு துட்டர் மனங்கலங்க
துள்ளிக் குதித்து இராமர் களம் வருகின்றார்.

4. வெஞ்சமர் கண்டுமே அஞ்சிக் கலங்கி ஓடிட
விஞ்சும் போர் செய்ய விரைந்துமே வருகின்றார்.

இராமர்கவி

இலங்கா புரிவேந்தன் இடருற்று நேற்று வெறுங் கையோடு நிற்க
கலங்காதே காரியத்தோடின்று சென்று நாளைவா வென்றுரைத்து
துலங்கிட வின்று போர்க்கோலம் கொண்டுமே போர்க்களம்நாடி
பலங்கொண்ட பகழிகள் கொண்டு பாய்ந்துமே செல்கின்றேனே.

இராமர். இராவணன் சண்டைத்தரு

நன்னன்ன நானன்ன நானன்னா - நன்ன
நானன்ன நானன்ன நானன்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமர் தரு

ஆரடா இராவணா அதட்டுகிறாய் - உன்னை
பாரடா பதறிட ஓட்டுவேன்
சூராதி சூரன்போல் நிற்கிறாய் - உன்
வீராதி வீரம் நான் அறிகுவேன்.

இராவணன் தரு

ஒட்டி நின்று வாலியை கொன்றநீ - இப்போ
கெட்டித்தனம் பேசிறாய் சண்டிநீ
வெட்டிவெட்டி கட்டிகட்டியாகவே - உன்னை
பட்டி தொட்டி யெங்குமே வீசுவேன்.

இராமர் தரு

அணிகொள் சரங்கள் தொடுக்கிறேன் - இன்று
அரிய பாதகா வுன்னைக் கொல்கிறேன்
குறை சொல்லி வெகுவீரம் பேசிறாய் - நீ
மறைவில்லா தூசனை செய்கிறாய்

இராவணன் தரு

வதைக்கிறேன் பாரடா இராமனே - உன்னை
புதைக்கிறேன் புவியினுள் மூடனே
உறுக்காதே நின்று நீமடையனே - மீசை
முறுக்காதே பொல்லாப்பு கொண்டுமே.

இராமர் தரு

அறுக்கிறேன் சினத்தை யரணாரானை - நீயும்
சுறுக்குடன் இங்கிருந் தோடிப்போ
அரிய சரங்கள் தொடுக்கிறேன் - உனது
சிரமது புவியில் புரள அறுக்கிறேன்.

இராவணன் தரு

விபுடனன் தன்னையே ஏவியே - எம்மை
வேபு பார்க்க வைத்த கோழையே
புண்ணாக நெஞ்சைப் பிளக்கிறேன் - உன்னை
மண்ணோடு மண்ணாய் புதைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமர் தரு

வருவாய் என்கிட்ட ராவணனே - மிண்டி
பொருதுவாய் கெட்ட கேவலனே
அவசரமாய் அனைவரு மறியுவுன் - சிரம்
வசமாய் உருளுது உடலது கிழியுதே.

சபை விருத்தம்

தசநாமி ராவணன் தானும் ராமனின் பாணத்தாலே
விசமிகள் சதியினாலே வீழ்ந்தானே புவியின்மீது
சிவனாருறை கைலப்பதி சேர்ந்தானவ ரருளினாலே
புவனத்திலுள்ளோரெல்லாம் புன்கண்ணீர் சொரிந்தனரே.

போர்வீரன் வெண்பா

எல்லாம் முடிந்ததரசியே சூதினாலே
வல்லமை உள்ள ஈழநாடு - எல்லாம்
வழிமூடி விட்ட துயரதாலே நான்
விழிகலங்க வந்தே னம்மா.

மாவீரன்வசனம்

மகாராணியே! எங்கள் கொடி சரிந்து விட்டது. மன்னரை வஞ்சித்து கொன்று விட்டார்களம்மா.

மண்டோதரி தாழிசை

அஞ்சுதே அகமது அழுவது தானோவையா
வஞ்கசர் கொடுங் கோண்மையாலே
மிஞ்சிடும் கொடிய வேதனை தன்னாலே
நெஞ்சமே நெருப்பாய் குமுறுதையோ.

மண்டோதரி வசனம்

மாவீரனே! சிறைப்பிடித்த சீதை தன்னை, வெறுத்து உடல் வருந்தி மாழா திருக்க, அல்லும் பகலும வளை காப்பதிலே கண்ணாயிருந்தாரேயன்றி, அவளைச் சொந்தம் கொண்டாட வில்லை, என்பதை அவரின் சுய சொரூபத்தின் மூலமேயறிந்தேனிப்பாவி, இதுவே நிசமான உண்மையடா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோதரி (புலம்பல்தரு)

தனனா தனனானினா தானின தான தனனாதன தானினா தனனா தனதான தனனாதனதான தனனா தனதான தானினதானா.

1. விதிவந்து மனம்நொந்துமே சகோதரர் சதியுந்தத்துயர் வந்ததே அழிந்தது எம்குலமே, மாமேரு சரிந்தீரோ நித்திலமே, (சுருள்) தங்கள் ராவண சொரூபம் மூலம் உண்மை உணர்ந்து, உவமை கொண்டேன் துரையே

2. சந்தேகம் வந்து விட்டால், அது சந்தோசக்கேடு என்று உள்ளம் திறந்த உங்கள், உண்மைச் சொருபம் கண்டு (சுரள்)
உள்ளிருந்தே கொல்லும் வியாதி யென்றுற்றறிந்து சித்தம் தெளிந்தேன் துரையே.

3. ஆரியர்கள் செய்திட்ட, அநியாய மோசமதால் காரிருளாய் வதந்திவந்து, உம்மை கட்டி மறைத்ததுமே
(சுரள்) சாதிபேதமற சொந்தம் கொண்டாடவும்மை, போட்டி போடும் காலம் வரும் துரையே.

4. பெண்ணாலே உங்களுக்கு, அழிவென்று சொன்னாரேயதனை
உண்மை தானதென்று, கண்டு கொண்டேனே நானுமின்று (சுரள்)
சீதையாலல்ல சூர்ப்பனகையாலெனு முண்மை, சுத்தமாயுலக மறிந்ததே துரையே.

மண்டோதரி வசனம்

விதிவரும் போது வீண்பழியும் வந்து தீருமென்பதற்கு உங்கள் ராவண சொரூபம் சான்று ஐயா (மண்டோதரி மயங்கி வீழ்கிறாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி வாழ்த்து

தரு

நன்னன்ன நானன்ன நானன்ன நானன்ன
நானன்ன நானானா.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

தனனாதனனா தனதனனா - தன
தனனாதனனா தனதனனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைவணக்கம் (இன்னிசை)

இத்தனை நேரமாக இருந்துமே கூத்துப் பார்த்த
அத்தனை பேர்க்கும் நாங்க ளன்பதாய் வணக்கம்கூறி

உத்தமக் கலைகள்யாவும் உயிர் பெற்று வாழ்க வென்று
அத்தனைத் தொழுது போற்றி யன்புடன் விடை பெற்றோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களம் மங்களம் மங்களமே - சுப
மங்களம் மங்களம் மங்களமே

தில்லையாடி கூத்தனுக்கும்
தான்தோன்றீஸ்வர அப்பனுக்கும்
துங்கமுகமுடை கணபதிக்கும்
தூயவாரை நகரழகனுக்கும்
வெண்கமல மலர் வீற்றிருக்கும்
கல்விக்கரசு சரஸ்வதிக்கும்

மங்களம் மங்களம் மங்களமே - சுப
மங்களம் மங்களம் மங்களமே.

பாவது வடித்துக் கூத்தாக
பாடிய நற்றமிழ் புலவனுக்கும்
கூத்தில் பாத்திரம் ஏற்றோர்க்கும்
பார்த்து ரசித்துக் களித்தோர்க்கும்
ஆட்டம் பொறுத்த வன்னையெங்கள்
பூமாதேவித் தாயாருக்கும்

மங்களம் மங்களம் மங்களமே - சுப
மங்களம் மங்களம் மங்களமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

1. அனுவுருத்திரன் (தென்மோடிக்கூத்து)
2. அலங்காரரூபன் (தென்மோடிக்கூத்து)
3. சத்தியவான் சாவித்திரி (தென்மோடிக்கூத்து)
4. வாளமீமன் (தென்மோடிக்கூத்து)
5. மரபுவழி நாடகங்கள்
6. இராவண தரிசனம்
7. திருவிளையாடற் புராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் பற்றி

முழுப்பெயர் : திரு. மூத்ததம்பி அருளம்பலம்.
புனைபெயர் : ஆரையூர் அருள்.
தொழில் : ஓய்வுநிலை அதிபர் (இ.அ.சே. 1)
கலைத்துறை: பல்துறை (கூத்து, நாடகம், கிராமியக்கலை, இலக்கியம்.) , இந்நூலாசிரியர், கல்வித்துறைக்கும் அதேவேளை சமயம், இலக்கியம், கலை ஆகிய துறைகளில் ஏராளமான பங்களிப்பு நல்கியவராவார். அடக்கம் அறிவின் அடிப்படை என்பதற்கும் கலைஞன் பிறக்கின்றான் என்பதற்கும் சிறந்த உதாரணமாக இருக்கும் இவர் சிறந்த தேர்ச்சியும் நிறைந்த புலமையும் உடைய பெரும் வித்தகருமாவார்.

இவர், கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம், நாடகம், வில்லுப்பாட்டு, கரகம், காவடி, காவியம், தாலாட்டு, ஊஞ்சல், கும்மி, கோலாட்டம் என பல்கலை இலக்கியத்திலும் மிகப்பெரும் ஈடுபாடு கொண்டதுடன், கூத்துக் கலைப் பிரிவுகளான வடமொடி, தென்மொடி, நவீனம், விஷேட கூத்து, சிந்துநடை, மகுடி, வசந்தன் ஆகிய அனைத்து வகைகளிலும் பலவற்றை ஆக்கி, பழக்கி அளிக்கை செய்ததுடன் தானும் பாத்திரமேற்று நடித்தவராவார்.விசேடமாக பெண்பாத்திரங்களில் நடிக்கும் இயல்பும் வித்தாரமும் கொண்டு வேண்டியதை வேண்டிய படி கனகச்சிதமாக செய்துவிட்டு அமைதியாக இருக்கும் திறமைக் கலைஞனாவார்.

இவற்றுள் பெரும்பாலானவை மாகாண மட்டம், தேசிய மட்டம் என்பவற்றில் பல பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றவையாகும். இவரது திறமைக்காக தேடிவந்த விருதுகளும் பட்டங்களும் பலவாகும் அவற்றுள். பல்கலை வித்தகர், தேசாபிமானி, தேசமானி, கலாபூசணம், கீரத்திஸ்ரீ போன்ற விருதுகளும் கூத்துக்கலைஞன், நாட்டுக்கூத்துக்கலைஞன், கலைஞானி, இறைஞானதேசிகர், இறைக்கவிமாமணி, கலைச்செம்மல், கவியரசர், பல்கலைமாமணி, சமூகதீபம், கலைமாமணி, கலைமுத்து, கலைத்தீபம், சமூகஜோதி போன்றவை அவற்றுள் சிலவாகும். இவரால் வெளியிடப்பட்ட சில பல நூல்களில் கிராமத்து உள்ளங்கள், இறையின்பப் பாவாரம், ஆகிய நூல்களுக்கு திறமைக்கான தேடல் விருதும் கிழக்கு மாகாண இலக்கிய விருதும் கிடைக்கப் பெற்றமை இவரது திறமைக்கு மிகப் பொருத்தமானவையாக அமைகின்றன.

1960 களின் பின்னர் கூத்துக்கலையில் மிகச்சிறந்த பங்களிப்பினை மேற்கொண்டு அவற்றில் பாத்திரமேற்று நடித்து நெறியாள்கை செய்து அவைக் காற்றியவற்றுள் சத்தியவான் சாவித்திரி, சூரசம்காரம், மறலியை வென்ற மங்கை, சுந்தரிவிடுதூது, இரணிய சங்காரம் என்பன தென்மோடியாகவும் வள்ளி திருமணம், வாலி வதம், கீசன் வதை, பணச்செருக்கு, இடும்பன் வதை, லவகுசா, அனுமன்கண்ட சீதை, குருதட்சணை, என்பன வடமோடியாகவும் வழிதவறிய வஞ்சி, செல்வச்செருக்கு, மங்கள தீபம், முதலியன நவீனவகையாகவும் வசந்தன் கூத்து, அனுமன் வசந்தன் முதலியன வசந்தன் வகையாகவும் அமைந்துள்ள கூத்துக்களாகும். இவருக்குக் கிடைத்த பட்டமான செம்மொழிப்புலவர் என்பது, இவரது எழிமையான போக்குக்கும் பெருமையை வெளிப்படுத்தாத இயல்புக்கும் புலமைக்கும் மிகச்சான்றாக அமைகின்றது.

செ. தவராசரெத்தினம்
ஓய்வு நிலை ஆசிரிய பயிற்சி முகாமையாளர்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org